செல்வன் செந்தமிழ் செல்வம்

நான்காம் படிவம்
114 சிறப்புப் பகுதி

ஜெகசெல்வன் கம்பெனி.
ாகர்கோவில்-3

செல்வன்

செந்தமிழ்ச் செல்வம்

முதற்புத்தகம்—சிறப்புப் பகுதி

(நான்காம் படிவத்திற்குரியது)

தொகுப்பாசிரியர் :
வித்துவான் ஈ. பண்டார நம்பியார்
பதிப்பாசிரியர் :
வித்துவான் மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை

ஜெகசெல்வன் கம்பெனி
நாகர்கோவில்

 1953 [விலை அணா 10

முதற்பதிப்பு—பிப்பிரவரி, 1953

Kabeer Printing Works, Madras (2136)

முன்னுரை

'செல்வன் செந்தமிழ்ச் செல்வம்' என்னும் பெயர் புனைந்துள்ள இந்நூல், அரசியலார் அண்மையில் வெளியிட்ட புதிய பாடத் திட்டத்திற்கு ஏற்ப அதன் சீரிய நோக்கம் சிறிதும் வழுவாது வெளி வருகின்றது.

மாணவர்கள் முன்னேற்றத்தையே முக்கிய நோக்கமாகக் கொண்டு கலையுணர்வுடன் செய்யுட்களும், உரை நடைப் பாடங்களும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. அவை மாணவர்களுக்கு நாட்டுப் பற்றும் மொழிப்பற்றும் விளைப்பனவாயும், அறிவு விளக்கத்திற்கு ஏற்றனவாயும் அமைந்துள்ளன.

செய்யுட்பகுதியில் ஆசிரியர் குறிப்பும், குறிப்புரையும் வினாக்களும் அளிக்கப்பட்டுள்ளன. உரை நடைப் பகுதியில் ஒவ்வொரு பாடத்தின் இறுதியிலும் அருஞ்சொற்பொருளும் வினாக்களும் கொடுக்கப்பட்டுள்ளன. இவை மாணவர்களுக்குப் பெரிதும் பயன்படும்.

இந்நூலுக்குக் கவிதைகளும், கட்டுரைகளும் தந்துதவிய அறிஞர்களுக்கு என் உள்ளம் நிறைந்த நன்றி உரியதாகுக!

இச்'செந்தமிழ்ச் செல்வத்'தைத் தமிழகம் ஏற்றருளி மாணவர் உலகம் மாண்புறத் தமிழ்த்தாய் அருள் புரிவாளாக!

தொகுப்பாசிரியர்

பொருளடக்கம்

செய்யுள்

உரை நடை

செல்வன்
செந்தமிழ்ச் செல்வம்

(நான்காம் படிவம்—சிறப்பு)

செய்யுள்

I. வாழ்த்து

1. தாயுமானவர் பாடல்

[இத்தொடர் 'தாயுமானவருடைய பாடல்' என விரியும். தாயுமானவர், சோழநாட்டில் திருமறைக்காட்டில் கேடிலியப்பப் பிள்ளையின் புதல்வராய்ப் பிறந்தார். இவர் திருமூலர் மரபிலுதித்த மௌன குருவிடம் உபதேசம் பெற்றார். இவர் காலம் 17-ஆம் நூற்றாண்டு.]

பரிபூரணானந்தம்

ஆழாழி கரையின்றி நிற்கவிலை யோ?கொடிய
ஆலமமு தாகவிலையோ ?
அக்கடலின் மீதுவட வனனிற்க வில்லையோ ?
அந்தரத் தகிலகோடி
தாழாம னிலைநிற்க வில்லையோ ? மேருவும்
தனுவாக வளையவிலையோ ?
சத்தமே கங்களும் வஜ்ரதர னாணையிற்
சஞ்சரித் திடவில்லையோ ?
வாழாது வாழவே ராமனடி யாற்சிலையும்
மடமங்கை யாகவிலையோ ?
மணிமந்த்ர மாதியால் வேண்டுசித் திகளுலக
மார்க்கத்தில் வைக்கவிலையோ ?
பாழான என்மனங் குவியவொரு தந்திரம்
பண்ணுவது னக்கருமையோ ?
பார்க்குமிட மெங்குமொரு நீக்கமற நிறைகின்ற
பரிபூர ணானந்தமே !

குறிப்புரை :

ஆழாழி - ஆழம் நிறைந்த கடல், ஆலம் - விஷம், வடவனல் - வடவைத் தீ, அந்தரம் - ஆகாயம், தனு - வில், சத்தமேகம் - ஏழு மேகங்கள், வஜ்ரதரன் - வச்சிராயுதத்தைத் தரித்தவனுன இந்திரன், மடமங்கை - அகலிகை.

விஞக்கள் :

1. தாயுமானவர் வரலாறு யாது ?
2. இறைவன் அருஞ்செயல்கள் யாவை ?
3. தாயுமானவர் இறைவனிடம் வேண்டுவதென்ன ?
4. அவர் இறைவனை எவ்வாறு விளிக்கின்ருர் ?

2. சீருப்புராணம்

[இது, முகம்மது நபியைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு, அவரது வரலாற்றைக் கூறும் ஒரு காவியம். ‘சீரு’ என்னும் வார்த்தைக்கு ‘ஜீவிய சரித்திரம்’ என்பது பொருள். இதன் ஆசிரியர் உமறுப் புலவர். இவர் இராமநாதபுரத்திலுள்ள கீழ்க்கரையை அடுத்த ஒரு சிற்றூரில் சேகு முதலியார் என்பவருக்குப் புதல்வராய்ப் பிறந்தார். இவர் காலம் 17-ஆம் நூற்ருண்டு.]

திருவினும் திருவாய்ப் பொருளினும் பொருளாய்த்
தெளிவினும் தெளிவதாய்ச் சிறந்த
மருவினும் மருவாய் அணுவினுக் கணுவாய்
மதித்திடாப் பேரொளி அனைத்தும்
பொருவினும் பொருவாய் வடிவினும் வடிவாய்ப்
பூதலத்(து) உரைத்தபல் உயிரின்
கருவினும் கருவாய்ப் பெருந்தலம் புரந்த
கருத்தனைப் பொருந்துதல் கருத்தே.

குறிப்புரை :

திரு - செல்வம், அழகு - மேன்மை, மரு - வாசனை, பொரு - உவமை, பூதலம் - உலகம், கருத்தன் - கடவுள், பொருந்துதல் - சேர்தல்.

விஞக்கள் :

1. சீருப்புராணம்—பெயர்க்காரணம் யாது ?
2. இறைவன் பெருமை எவ்வாறு கூறப்பட்டுள்ளது ?
3. ஆசிரியர் வரலாற்றுச் சுருக்கம் யாது ?

3. திருப்புகழ்

[இது, முருகக் கடவுளது மேலான புகழைக் கூறுகின்ற ஒரு நூல். இதன் ஆசிரியர் அருணகிரி நாதர். இவர் காலம் 15-ஆம் நூற்றாண்டு.]

சிதம்பரம்

காவி யுடுத்துந் தாழ்சடை வைத்துங்
காடுகள் புக்குந் தடுமாறிக்
காய்கனி துய்த்துங் காயமொ றுத்துங்
காசினி முற்றுந் திரியாதே ;
சீவ னொடுக்கம் பூத வொடுக்கம்
தேற வுதிக்கும் பரஞான
தீப விளக்கங் காண எனக்குன்
சீதள பத்மந் தருவாயே ;
பாவ நிறத்தின் தாருக வர்க்கம்
பாழ்பட வுக்ரந் தருவீரா !
பாணிகள் கொட்டும் பேய்கள் பிதற்றும்
பாடலை மெச்சும் கதிர்வேலா !
தூவிகள் நிற்குஞ் சாலி வளைக்குஞ்
சோலை சிறக்கும் புலியூரா !
சூரர் மிகக்கொண் டாட நடிக்குந்
தோகை நடத்தும் பெருமாளே !

குறிப்புரை :

காவி உடுத்தும் - காவி ஆடையை அணிந்தும், துய்த்தும் - உண்டும், காயம் - உடம்பு, ஒறுத்தும் - வாட்டியும், காசினி - உலகம், சீதள பத்மம் - குளிர்ந்த தாமரை மலர் போலும் பாதங்களை, தாருகவர்க்கம் - தாருகாசுரனுடைய வமிசம், உக்ரம் - கோபம், பாணிகள் - கைகள், தூவிகள் - அன்னப் பறவைகள், சாலி - நெற்பயிர், புலி ஊரா - சிதம்பரத்தில் எழுந்தருளியுள்ளவனே.

வினாக்கள் :

1. திருப்புகழ் ஆசிரியர் யார் ?
2. இவர் வெளிவேடத்தை வெறுப்பவர் என்பதற்குச் சான்று என்ன ?
3. முருகன் பெருமை எவ்வாறு கூறப்பட்டுள்ளது ?

II. அறவுரை

1. நாலடியார்

[இது நான்கு அடிகளையுடைய நேரிசை இன்னிசை வெண்பாக்களி-லாகிய ஒரு நீதி நூல். இந்நூல் திருக்குறளைப் போன்ற பெருமை உடையது. இதனைச் சமண முனிவர் பலர் பாடினர் என்பர். இது 'பதினெண்கீழ்க்கணக்கு' நூற்களில் ஒன்ருகச் சேர்க்கப்பட்டுள்ளது. இதனை டாக்டர் போப்புப் பாதிரியார் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்-துள்ளார்.]

பெரியவர் கேண்மையும் சிறியவர் தொடர்பும்

பெரியவர் கேண்மை பிறைபோல நாளும்
வரிசை வரிசையா நந்தும் ;—வரிசையால்
வானூர் மதியம்போல் வைகலும் தேயுமே
தானே சிறியார் தொடர்பு. 1

கற்ருர் உயர்வு

களர்நிலத் துப்பிறந்த உப்பினைச் சான்ருேர்
விளைநிலத்து நெல்லின் விழுமிதாக் கொள்வர் :
கடைநிலத்தோர் ஆயினும், கற்றறிந் தோரைத்
தலைநிலத்து வைக்கப் படும். 2

குடிப்பிறந்தார் தன்மை

ஒருபுடை பாம்பு கொளினும், ஒருபுடை
அங்கண்மா ஞாலம் விளக்குறூஉம் திங்கள்போல்
செல்லாமை செவ்வனேர் நிற்பினும் ஒப்புரவிற்(கு)
ஒல்கார் குடிப்பிறந் தார். 3

புல்லறிவினர் இயல்பு

தாமேயும் இன்புறர் ; தக்கார்க்கும் நன்ருற்ருர் ;
ஏமஞ்சார் நன்னெறியும் சேர்கலார் ;—தாமயங்கி
ஆக்கத்துள் தூங்கி அவத்தமே வாழ்நாளைப்
போக்குவார் புல்லறிவி னர். 4

தானே தன் உயர்வுக்குக் காரணம்.

நன்னிலைக்கண் தன்னை நிறுப்பானும், தன்னை
நிலைகலக்கிக் கீழிடு வானும்,—நிலையினும்
மேன்மேல் உயர்த்து நிறுப்பானும், தன்னைத்
தலையாகச் செய்வானும் தான். 5

குறிப்புரை :

1. கேண்மை - நட்பு, வரிசை வரிசை ஆ - முறை முறையாக, நந்தும் - வளரும், வைகலும் - நாள்தோறும், வரிசையால் - முறையாக.

2. சான்றோர் - பெரியோர்கள், விழுமிது ஆ - உயர்ந்த பொருளாக, தலை நிலத்து - மேலான இடத்தில்.

3. ஒருபுடை - ஒரு பக்கத்தை, அம் கண் மா ஞாலம் - அழகிய இடமுள்ள பெரிய பூமியை, செல்லாமை - வறுமை, ஒப்புரவிற்கு - உபகாரம் செய்வதற்கு, ஒல்கார் - பின் வாங்க மாட்டார்.

4. புல் அறிவினர் - அற்ப அறிவுடையவர், ஏமம் சார் - பாது காப்பாகப் பொருந்திய, அவத்தமே - வீணாக.

5. நிறுப்பானும் - நிறுத்துகின்றவனும், கீழ் இடுவானும் - தாழ்ந்த நிலையில் சேர்ப்பவனும்.

வினாக்கள் :

1. பிறை, மதியம் இவற்றை உவமையாகக் கொண்டு விளக்கும் நீதிகள் யாவை ?

2. கற்றார் உயர்வு கூறும் நாலடிச் செய்யுள் எது ? அஃது என்ன அணி ?

3. ஆசிரியர் திங்களை உவமையாகக் கொண்டு குடிப்பிறந்தார் தன்மையை எவ்வாறு விளக்குகின்றார் ?

4. புல்லறிவினர் இயல்பு யாது ?

5. 'பெருமையும் சிறுமையும் தான் தர வருமே,' என்ற கருத்து அடங்கிய நாலடிச் செய்யுள் எது ?

2. திரிகடுகம்

[இது பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று. சுக்கு, மிளகு, திப்பிலி என்ற மூன்று பொருள்களாலான ஒருவகை மருந்து மக்கள் உடல் நோயை நீக்கி இன்பம் பயத்தல் போல, அம்மருந்துகளுக்கு நிகரான மும்மூன்று நீதிகளையுடைய பாடல்களாலான இந்நூல் மக்கள் மன நோயை நீக்கி இன்பம் பயத்தலால், திரிகடுகம் என்னும் பெயர் பெற்றது. இதன் ஆசிரியர் நல்லாதனார். இவர் கடைச்சங்க காலத்தினர் என்பர்.]

புகழுடம்பு எய்தியவர்

மண்ணின்மேல் வான்புகழ் நட்டானும், மாசில்சீர்ப்
பெண்ணினுள் கற்புடையாள் பெற்றானும்,—உண்ணும்நீர்க்
கூவல் குறைவின்றித் தொட்டானும் இம்மூவர்
சாவா உடம்பெய்தி னார். 1

செல்வத்தை அழிக்கும் படை

தன்னை வியந்து தருக்கலும், தாழ்வின்றிக்
கொன்னே வெகுளி பெருக்கலும்,—முன்னிய
பல்பொருள் வெஃகும் சிறுமையும் இம்மூன்றும்
செல்வம் உடைக்கும் படை. 2

நின்ற புகழுடையார்

தன்னச்சிச் சென்றாரை எள்ளா ஒருவனும்,
மன்னிய செல்வத்துப் பொச்சாப்பு நீத்தானும்,
என்றும் அழுக்கா(று) இகந்தானும் இம்மூவர்
நின்ற புகழுடை யார். 3

உள்ளன போலக் கெடுவன

கிளைஞர்க்(கு) உதவாதான் செல்வமும், பைங்கூழ்
விளைவின்கண் போற்றான் உழவும்,—இளையனாய்க்
கள்ளுண்டு வாழ்வான் குடிமையும் இம்மூன்றும்
உள்ளன போலக் கெடும். 4

எச்சமிழந்து வாழ்பவர்கள்

நன்றிப் பயன்தூக்கா நாணிலியும், சான்றோர்முன்
மன்றில் கொடும்பா(டு) உரைப்பானும்—நன்(று)இன்றி
வைத்த அடைக்கலங் கொள்வானும் இம்மூவர்
எச்சம் இழந்துவாழ் வார். 5

குறிப்புரை :

1. மாசில் - குற்றமில்லாத, சீர் - சிறப்பு, கூவல் - குளம், தொட்டானும் - தோண்டியவனும்.
2. வியந்து - புகழ்ந்து, தருக்கல் - கர்வங்கொள்ளுதல், கொன்னே - வீணாக, வெஃகும் - விரும்பும், படை - ஆயுதம்.
3. நச்சி - விரும்பி, பொச்சாப்பு - மறதி, நீத்தானும் - விட்டவனும், அழுக்காறு - பொறாமை.
4. கிளைஞர் - உறவினர், பைங்கூழ் - பசுமையான பயிர்.
5. தூக்கா - அளந்தறியாத, கொடும்பாடு - பொய்ச்சொல், எச்சம் - மக்கள்.

வினாக்கள் :

1. ‘சாவா உடம்பெய்தினார்’—யாவர்?
2. ‘செல்வம் உடைக்கும் படை’—எவை?
3. ‘நின்ற புகழுடையார்’—யாவர்?
4. உள்ளன போலக் கெடுவன யாவை?
5. ‘எச்சம் இழந்து வாழ்வார்’—யாவர்?
6. ‘திரிகடுகம்’—பெயர்க் காரணம் யாது?

III. தொடர்நிலைச் செய்யுள்

1. பாஞ்சாலி சபதம்

[இது பாஞ்சால நாட்டு மன்னன் மகள் திரௌபதி, துரியோதனன் சபையில் செய்த சபதத்தைக் கூறும் நூல். இந்நூலாசிரியர் தமிழ் மொழிக்குப் புதிய சுவையும், தமிழ் மக்களுக்குப் புத்துயிரும் தந்த கவிஞர் கோமான் சுப்பிரமணிய பாரதியாராவர். இவர் திருநெல்வேலிச் சீமையில் எட்டையபுரத்தில் சின்னசாமி ஐயருக்கும் இலக்குமி அம்மாளுக்கும் புதல்வராய்ப் பிறந்தவர். 1882ல் தோன்றி, 1921ல் மண்ணுலக வாழ்வை நீத்தார்.]

துரியோதனன் சபையில் பாஞ்சாலி

ஆடை குலைவுற்று நிற்கின்றாள்—அவள்
ஆவென் றழுது துடிக்கின்றாள் ;—வெறும்
மாடு நிகர்த்ததுச் சாதனன்—அவள்
மைக்குழல் பற்றி யிழுக்கின்றான் ;—இந்தப்
பீடையை நோக்கினன் வீமனும்—கரை
மீறி எழுந்தது வெஞ்சினம்—துயர்
கூடித் தருமனை நோக்கியே—அவன்
கூறிய வார்த்தைகள் கேட்டிரோ ? 1

வீமன் பேசுகிறான் :

‘ நாட்டைஎல் லாந்தொலைத்தாய்—அண்ணே !
நாங்கள் பொறுத்திருந்தோம் ;
மீட்டும் எமையடிமை—செய்தாய் ;
மேலும் பொறுத்திருந்தோம். 2

‘ துருப தன்மகளைத்—திட்டத்
துய்ம்நன் உடன்பிறப்பை
இருப கடைஎன்றாய்—ஐயோ !
இவர்க்க டிமைஎன்றாய். 3

‘ இதுபொ றுப்பதில்லை—தம்பீ !
எரித ழல்கொண்டுவா ;
கதிரை வைத்திழந்தான்—அண்ணன்
கையை எரித்திடுவோம் !’ 4

விஜயன் வீமனுக்குச் சொல்லுகிருன் :

‘ தருமத்தின் வாழ்வதனைச் சூது கவ்வும் ;
தருமமறு படிவெல்லும்,’ எனும்இ யற்கை
மருமத்தை நம்மாலே உலகங் கற்கும்
வழிதேடி விதியிந்தச் செய்கை செய்தான்.
கருமத்தை மேன்மேலுங் காண்போம் ; இன்று
கட்டுண்டோம் ; பொறுத்திருப்போம் காலம்மாறும் ;
தருமத்தை அப்போது வெல்லக் காண்போம் ;
தனுவுண்டு ; காண்டீவம் அதன்பேர்,’ என்ருன். 5

(திரௌபதியின் துகிலுரிந்த துச்சாதனன் கைசோர்ந்து வீழ்ந்தான்)

பாஞ்சாலி சபதம்

தேவிதி ரௌபதி சொல்வாள்:—‘ஓம்
தேவி பராசக்தி ஆணை யுரைத்தேன்
பாவிதுச் சாதனன் செந்நீர்—அந்தப்
பாழ்த்துரி யோதனன் ஆக்கை இரத்தம்
மேவி இரண்டுங் கலந்து—குழல்
மீதினிற் பூசி நறுநெய் குளித்தே
சீவிக் குழல்முடிப் பேன்யான் !—இது
செய்யும்முன் னேமுடி யேன் !’என் றுரைத்தாள். 6

ஓமென் றுரைத்தனர் தேவர் ;—ஓம்
ஓமென்று சொல்லி உறுமிற்று வானம் ;
பூமி யதிர்ச்சிஉண் டாச்சு ;—விண்ணைப்
பூழிப் படுத்திய தாஞ்சுழல் காற்று ;
‘ சாமி தருமன் புவிக்கே,’—என்று
சாட்சி யுரைத்தன பூதங்க ளைந்தும் ;
நாமும் கதையை முடித்தோம் ;—இந்த
நானில முற்றும்நல் லின்பத்தில் வாழ்க ! 7

குறிப்புரை :

நிகர்த்த - ஒத்த, பீடை - துன்பம், வெஞ்சினம் - கொடிய கோபம், துயர் - துன்பம், மருமம் - இரகசியம், தனு - வில், செந்நீர் - இரத்தம், ஆக்கை - உடல், குழல் - கூந்தல், பூழி - புழுதி, பூதங்களைந்து - நிலம், நீர், தீ, வளி, ஆகாயம்.

வினாக்கள் :

1. **‘பாஞ்சாலி சபதம்’** என்னும் நூலை இயற்றியவர் யார்? அவர் வரலாறு யாது?
2. சினங்கொண்ட வீமன் விஜயனை நோக்கிக் கூறியதென்ன?
3. விஜயன் வீமனுக்குக் கூறியதென்ன?
4. பாஞ்சாலி செய்த சபதம் யாது?
5. பாஞ்சாலி சபதம் செய்த போது நிகழ்ந்தன யாவை?

2. வில்லி பாரதம்

[‘வில்லிபுத்தூர் ஆழ்வாரால் இயற்றப்பட்ட பாரதம்’ என்பது ‘வில்லி பாரதம்’ என்பதன் பொருள். பாரதம் முதலில் வேதவியாசரால் வடமொழியில் இயற்றப்பட்டது. பின்னர் **அகத்தியபட்டர்,** பாலபாரதம் என்னும் ஒரு நூலை இயற்றினர். வில்லிபுத்தூரார் பாலபாரதத்தை முதல் நூலாகவும், வியாச பாரதத்தைப் பெருந்துணையாகவும் கொண்டு, தமிழில் இந்நூலை இயற்றினர். இவர் சனியூரில் வீரராகவாசாரியாருக்குப் புதல்வராய்ப் பிறந்தார். இவரை ஆதரித்தவன், வக்கபாகையை ஆண்ட வரபதியாட்கொண்டான் என்னும் சிற்றரசன். இவர் காலம் சுமார் 450 வருடங்களுக்கு முன்னது என்பர். பாடப்பகுதி விராடபருவத்திலுள்ளது.]

நிரை மீட்சிச் சருக்கம்

[பாண்டவர்கள் தாங்கள் விராடதேசத்தில் அஞ்ஞாதவாசம் செய்கையில் துரியோதனுதியர் கவர்ந்துகொண்டு போன விராட அரசன் பசுக்கூட்டங்களை மீட்டு வந்த வரலாற்றைக் கூறும் நூற்பிரிவு.]

துரோணன் அருச்சுனனை எதிர்த்தல்

தாளினை யிறைஞ்சிய தனஞ்ச யன்றெடும்
வாளிகண் டுளமிக மகிழ்ச்சி கூரவும்
மீளிமை யுடையவன் வீமன் மீதெழுந்
தூளிசெய் தேரினைத் துரோண னுந்தினன். 1

அருச்சுனனது பணிவு மொழி

உந்துதேர் முனியை யந்த உதிட்டிரன் இளவல் நோக்கிச்
சிந்தையில் அன்பு கூரச் சேவடி பணிந்து போற்றி,
‘அந்தணர் அரசே, உன்ற னருளினுல் அடவி நீங்கி
வந்தனம்,’ என்று சிற்சில் வாசகம் இயம்பு வானே : 2

'யாதுமொன் றறியா வென்னை இவனலா திலையென் றிந்த
மேதினி மதிக்கு மாறு வில்முதல் படைகள் யாவும்
தீதறத் தந்த உண்மைத் தெய்வநீ யென்றால் பஞ்ச
பாதகம் தன்னில் ஒன்றுன் பதயுகம் பிழைப்ப தையா! 3

'மன்னொடு சூழ நின்ற மாசுண முயர்த்த கோவை
மின்னொடு முருமே றென்ன வெகுண்டமர் புரிவ தல்லால்
நின்னொடுங் கிருப னோடும் நின்மக னோடும் முந்தை
தன்னொடும் புரியேன் வெம்போர் தக்கதோ சரதம் பாவம்!' 4

துரோணர் 'போர் செய்ய வேண்டும்,' எனல்

அம்முனி தன்னோ டிவ்வா றருச்சுனன் புகல வல்விற்
கைம்முனி வனும்,'செஞ் சோற்றுக் கடன்கழித் திடுதல் வேண்டும்
தெம்முனை மதியா வீர! தேவர்தம் பகையை வென்ற
வெம்முனை காணு மாறுன் வில்வளைத் திடுக,' என்றான். 5

துரோணரும் அருச்சுனனும் போர் செய்தல்

குருவுமக் குருவைத் தப்பாக் குருகுலக் கோவுந் தங்கள்
அருவரைத் தோளில் நாணி அறைதரப் பிறைவில் வாங்கிக்
கருவுயிர்த் தெழுந்த கால மழைமுகில் கால்கொண் டென்ன
ஒருவருக் கொருவர் வாளி யோரொரு கோடி யெய்தார். 6

இருவரும் சமமாகப் போர் செய்தல்

அதிரதர் தம்மை யெண்ணில் அணிவிரல் முடக்க வொட்டா
முதிர்சிலை முனியும் வீர முனிவிலா முகனும் விட்ட
கதிர்முனைப் பவன வேகக் கடுங்கொடும் பகழி யாவும்
எதிரெதிர் கோத்த வல்லால், பட்டில இருவர் மேலும். 7

அருச்சுனன் வில் ஆற்றல்

வண்டுதான் முரலுங் கஞ்ச மாலையான் பயிற்று வித்துப்
பண்டுதான் கண்ட கூற்றிற் பதின்மடங் குயர்ந்த பண்பான்
மிண்டுவா னவரை வென்ற விறலுடை விசயன் வின்மை
கண்டுதான் அவன்ற னோடு கற்பதற் குன்னி னானே. 8

துரோணர் தோல்வியடைதல்

ஏறுதேர் முரிய வேத மெழுதிய துவசம் வீழத்
தாறுபாய் புரவி நான்குஞ் சாரதி தலையுஞ் சிந்தக்
கூறுபோர் நாணி யோடு குனிசிலை துணியப் பின்னர்
ஆறுகோல் தொடுப்ப வெள்கி யாரியன் முதுகிட் டானே. 9

அசுவத்தாமன் எதிர்த்தல்

தந்தைபோ ரழிந்து போன சாபலங் கண்டு வெம்பி
இந்திரன் மதலை யோடு மெதிர்த்தன னிவுளித் தாமா;
முந்துற விருவர் வில்லு முரண்படக் குனித்த போரின்
அந்தணன் கணையான் மன்னன் வில்லின்நா ணற்ற தன்றே. 10

அசுவத்தாமன் தோல்வியடைதல்

மந்தர மனைய தோளான் மற்றொரு வரிவில் வாங்கி,
'இந்தவெம் பகழிக் கெல்லா மீடருன் இவன்,' என் றெண்ணிச்
சந்திர மவுலி தந்த சாயகந் தொடுத்த லோடும்
நொந்'தினி யென்செய் வோம்!' என் றூர்புக நோக்கினனே. 11

கிருபர் முதலியோர் தோற்றல்

கிருபனு மவனைக் கண்டு கெட்டனன்; கேடி லாத
நிருபர்கள் பலரு மோதி நேர்பொரு தாவி மாய்ந்தார்;
பொருபடைச் சேனை யாவும் புக்குழி யாவர் கண்டார்?
ஒருபரி யொற்றை யாழித் தேரவ னுச்ச மானன். 12

வீடுமர் முதலியவர் அருச்சுனனை வளைதல்

வென்னிடு மளவில் நின்ற வீடுமன் விதுரன் வண்டு
தென்னிடு மலங்கன் மாலைச் சுயோதனன் சிந்து ராயன்
துன்னிடு நிருபர் சூழச் சூழ்திசை நான்கும் வந்து
முன்னிடு தேரோன் றன்னை முனையுற வளைந்து கொண்டார். 13

அருச்சுனன் எதிர் அம்பு தொடுத்தல்

இவர்பெருந் தேரின் மேலோ னொருவனே யிலக்க தாகத்
தவருடன் குனித்த நேக சாயகந் தொடுத்த காலைக்
கவுரிபங் காளன் தன்னைக் கண்ணுறக் கண்ட காளை
பவுரிவந் தொன்றுந் தன்மேற் படாமல்வெம் பகழி கோத்தான். 14

அருச்சுனன் நான்கு திக்கிலும் அம்புகளை விடுதல்

குடதிசை மகவான் வாளி குணதிசை வருணன் வாளி
வடதிசை மறலி வாளி தென்திசை மதியின் வாளி
அடலுற விமைப்பி னேவி யவரவர் மார்புந் தோளும்
படருறப் படைக ணீறு படப்படப் பரப்பி னானே. 15

அருச்சுனன் பகைவர் சேனையை மயங்கி விழச் செய்தல்

கோகன நாகவேகக் கொடியவன் சேனை யாவும்
மோகனக் கணையொன் றேவி முடியடி படிக்கண் வீழ்த்தான்;
மாகனக் கடவுள் தந்த மணிப்பொலந் தடந்தேர் வெள்ளை
வாகனக் குரிசில் வின்மை வல்லப மிருந்த வாறே ! 16

பகைவர் ஆடைகளைப் பறித்தல்

இத்தரை இடங்கொ ளாமல் இறந்தனர் போல வீழ்ந்த
மத்தரை மயிர்கொய் தென்ன மணிக்கொடித் தூசுந் தூசும்
உத்தரை வண்டற் பாவைக் குடுத்துதற் கென்று கொய்தான்
அத்தரை மவுலித் திங்கள் அமுதுகப் புடைத்த வில்லான். 17

மயங்கி விழுந்தவர் விழித்தெழுந்து விசயனை மெச்சுதல்

விழுந்தவர் நெடும்போ தாக மெய்யுணர் வெய்தி மெல்ல
அழுந்திய பகழி யோடு மரிபடு கவசத் தோடும்
எழுந்துதம் மிரதம் யானை யிவுளியி னேறி யேறித்
தொழுந்தகு தெய்வ மன்ன சூரனைத் துதித்து மீண்டார். 18

அருச்சுனன் துரியோதனனை மகுடபங்கஞ் செய்தல்

கொடிமதிற் பாகை வேந்தன் கொங்கர்கோன் புரவிக் காலால்
வடதிசை யரசர் தங்கண் மாமணி மகுடம் போல
அடலுடை விசய னொற்றை யம்பினுன் மீண்டுஞ் சென்று
படவர வுயர்த்த கோவைப் பண்ணினுன் மகுட பங்கம். 19

'மறைந்துறை காலம் நிறைவேறு முன் வெளிப்பட்டனர்,' என்ற துரியோதனனுக்கு வீடுமர் மறு மொழி கூறல்

'வல்லினி லழிந்து நின்முன் மன்னவை தன்னி னன்று
சொல்லிய காலஞ் செல்லா முன்னிவர் தோற்றஞ் செய்தார்;
புல்லிய கானி னின்னம் போகநீ புகறி,' என்று
வெல்படை வேந்தன் சொல்ல, வீடுமன் மீண்டுஞ் சொல்வான்: 20

'செந்நெலே கன்னல் காட்டச் சேர்ந்தயற் செறுவி னின்ற
கன்னலே கமுகு காட்டுங் கங்கைநீர் நாட ! கேண்மோ :
இன்னலே யுழந்தோர் கால மிந்துவி னியக்கந் தன்னால்
நென்னலே சென்ற'தென்றான் நெஞ்சினி லழுக்கி லாதான். 21

துரியோதனன் தனது ஊருக்குச் செல்லுதல்

அரவினை யுயர்த்த கோமா னவ்வுரை கேட்ட போழ்தே
பரவையி னிரவி கண்ட பனிமதி போல மாழ்கி,
'வரவர அறிதும்,' என்று மாபெருஞ் சேனை யோடும்
இரவிடை யாருந் துஞ்ச எயில்வளை நகரி புக்கான். 22

குறிப்புரை :

1. தனஞ்சயன் - அருச்சுனன், வாளி - அம்பு, உந்தினான் - செலுத்தினான்.

2. முனி - துரோணன், உதிட்டிரன் - தருமன், அடவி - காடு.

3. மேதினி - உலகம், பஞ்சபாதகம் - கொலை, பொய், களவு, கள் குடித்தல், குருத்துரோகம்.

4. மாசுணம் - பாம்பு, உரும் ஏறு என்ன - பேரிடி போல, அமர் - போர், நின் மகன் - உன் மகனாகிய அசுவத்தாமன், முந்தை - பீஷ்மன், சரதம் - நிச்சயமாக.

5. புகல - சொல்ல, தெவ் முனை மதியா வீர - பகைவர்களுடைய போரைச் சிறிதும் மதியாத வீரனே, தேவர்தம் பகை - நிவாதகவச காலகேயர் என்னும் அசுரர்கள்.

6. குருகுலக்கோ - அருச்சுனன், எய்தார் - தொடுத்தனர்.

7. கதிர் முனை - கூரிய நுனியை, பவனம் - காற்று, பகழி - அம்பு.

8. கஞ்சம் - தாமரை, தானவர் - அசுரர், உன்னினான் - கருதினான்.

9. துவசம்-கொடி, புரவி - குதிரை, சாரதி-தேர்ப்பாகன், குனிசிலை - வளைந்த வில், முதுகிட்டான் - புறங்கொடுத்தான்.

10. இவுளித்தாமா - அசுவத்தாமன், சாபலம் - நடுக்கம், இந்திரன் மதலை - அருச்சுனன், அற்றது - அறுபட்டது.

11. வாங்கி - வளைத்து, சந்திரமவுலி - சந்திரனைச் சடையில் தரித்த சிவன், சாயகம் - பாசுபதாஸ்திரம்.

12. நிருபர்கள் - அரசர்கள், பரி - குதிரை.

13. அலங்கல் - மாலை, சுயோதனன் - துரியோதனன், சிந்துராயன் - சிந்து தேசத்து அரசனான ஜயத்திரதன்.

14. சாயகம் - அம்பு, கவுரி - பார்வதி, பரிவு வந்து - சுழன்று கொண்டே.

15. குடதிசை - மேற்குத்திசை, மகவான் - இந்திரன், குணதிசை - கிழக்குத்திசை, மறலி - யமன், மதியின் வாளி - குபேரனைத் தெய்வமாக வுடைய அம்பு.

16. மோகனக்கணை - மயக்கத்தை உண்டாக்கும் மோகனாஸ்திரம், மா - சிறந்த, கனல் கடவுள் - அக்கினி தேவன், தட - பெரிய, மணி - அழகிய.

17. மத்தரை - மயக்கம் அடைந்தவர்களை, தூசு - சீலை, அத்தர் - சிவபிரானுர், மவுலி - சிரசு.

18. அரிபடுகவசம் - பல துளைகளையடைந்த கவசம், இவுளி - குதிரை, சூரன் - வீரனான அருச்சுனன்.

19. அடல் - வலிமை, பட அரவு உயர்த்த கோ - துரியோதனன்.

20. வல்லினில் அழிந்து - சூதாட்டத்தில் தோற்று.

21. கன்னல் - கரும்பு, இந்து - சந்திரன், நென்னல் - நேற்று.

22. பரவை - கடல், இரவி - சூரியன், துஞ்ச - தூங்குகையில், எயில் - மதில்.

வினாக்கள் :

1. நிரை கவர்ந்தமைக்குக் காரணம் என்ன ?
2. தாளிணை இறைஞ்சிய தனஞ்சயன்—எவ்வாறு இறைஞ்சினான் ?
3. அருச்சுனன் குருபத்தியுடையவன் என்பதை எதனாலறியலாம் ?
4. பஞ்சமா பாதகங்கள் எவை ?
5. அருச்சுனன், 'பொரமாட்டேன்,' என்றுரோடு பின்பு பொருதது ஏன் ?
6. துரியோதனனது கொடி, துரோணர் கொடி—இவை எவை ?
7. கஞ்சமாலையான்—யார் ?
8. 'வெள்ளை வாகனக்குரிசில்' என்றது யாரை ?
9. அருச்சுனன் எந்தெந்தத் திக்கில் யார் யாருடைய படையை விட்டான் ?
10. சூரனைத் துதித்து மீண்டவர் யாவர் ? எதனால் ?
11. 'தான் அவன்றனோடு கற்பதற்கு உன்னினான்' என்றதன் கருத்து என்ன ?
12. அருச்சுனன் சிறப்பைத் தெரிவிக்கும் தொடர்மொழிகள் எவை ?
13. கங்கை நீர் நாடு எவ்வாறு வருணிக்கப்பட்டுள்ளது ?

3. மனோன்மணீயம்

[இது சீவக மன்னன் மகள் மனோன்மணி என்பவளது வாழ்க்கையை விளக்கிப் புதிய முறையில் புனைந்த ஒரு நாடக நூலாகும். இது லிட்டன் பிரபு (Lord Lytton) ஆங்கிலத்தில் எழுதிய இரகசிய வழி (The Secret way) என்னும் நூலைத் தழுவி எழுதப்பட்டுள்ளது. இதனை இயற்றியவர் பேராசிரியர் P. சுந்தரம் பிள்ளை அவர்களாவர். இவர் திருவிதாங்கூரிலுள்ள ஆலப்புழை எனும் ஊரில் 1855-ஆம் ஆண்டு பிறந்தார். இவர் தந்தையார் பெருமாள் பிள்ளை என்பவர். பேராசிரியர் சுந்தரம் பிள்ளை அவர்கள், திருவனந்தபுரம் மகாராஜா கல்லூரியில் M. A. பட்டம் பெற்று, அக்கல்லூரியிலேயே அறிவு நூல் ஆசிரியராய் அமர்ந்து பணி புரிந்தார்; நூற்றொகை விளக்கம் முதலிய பல நூல்களை இயற்றியுள்ளார்.]

முதல் அங்கம்] **[நான்காம் களம்**

ஜீவகன் :

எங்குல குருவே! இயம்பிய(து) ஒவ்வும்;
எங்குள(து) இக்கொடிக்(கு) இசைந்த
பொங்(கு)எழில் பொலியும் புரையறு தருவே?

சுந்தரர் :

உலகுள மற்றை யரசெலாம் நலமில்
கள்ளியுங் கருவேற் காடுமாய் ஒழிய,
ஜகமெலாந் தங்க நிழலது பரப்பித்
தொலைவிலாத் துன்னலர் வரினும் அவர்தலை
இலையெனும் வீரமே இலைபாய்த் தழைத்து,
புகழ்மணங் கமழும் குணம்பல பூத்து,
துனிவரும் உயிர்க்குள துன்பம் துடைப்பான்
கனியுங் கருணையே கனியாக் காய்த்துத்
தருமநா(டு) என்னும் ஒருநா மங்கொள்
திருவாழ் கோடாஞ் சேரதே சத்துப்
புருடோத் தமன்எனும் பொருவிலாப் புருடன்
நீங்கில் இல்லை நினது
பூங்கொடி படரப் பாங்காந் தருவே.

ஜீவகன் :

நல்லது ! தேவரீர் சொல்லிய படியே,
இடுக்கண் களைந்த இறைவ !
நடத்துவன் யோசனை பண்ணி நன்றே.

சுந்தரர் :

யோசனை வேண்டிய தன்று ; நடேசன்
என்றுளன் ஒருவன் ; ஏவில்,
சென்(று)அவன் முடிப்பன் மன்றல் சிறக்கவே.

ஜீவகன் :

கெடலறு சூழ்ச்சிக் குடிலனோ(டு) உசாவி—

சுந்தரர் :

அரஹர ! குருபர ! கிருபா நிதியே !
காவாய் காவலன் ஈன்ற
பாவையை நீயே. காவாய் பசுபதே !

குறிப்புரை :

எழில் - அழகு, பொலியும் - விளங்கும், புரை - குற்றம், தரு - மரம், ஜகம் - உலகம், துன்னலர் - பகைவர், துனி - வருத்தம், துடைப்பான் - நீக்குவான், பொருவு இலா - ஒப்பில்லாத, இடுக்கண் - துன்பம், மன்றல் - திருமணம், உசாவி - கேட்டு, பசுபதே - உயிர்களுக்கு நாயகனே.

வினாக்கள் :

1. மனோன்மணீயத்தின் ஆசிரியர் யார் ? அவர் வாழ்க்கைக் குறிப்பு யாது ?

2. சேரவேந்தன் சிறப்பைப்பற்றிச் சுந்தர முனிவர் கூறியது யாது ?

3. ஜீவகன் குடிலனோடு ஆலோசிப்பதை முனிவர் விரும்பவில்லை என்பதை எதனால் அறியலாம் ?

4. ‘ நினது பூங்கொடி படரப் பாங்காந் தருவே ’—சந்தர்ப்பம் யாது ? விளக்குக.

IV. பல்சுவை

1. காலைக் கதிர்

எண்ணரிய மறையினொடு கின்னரர்கள்
இசைபாட, உலகம் ஏத்த
விண்ணவரும் முனிவர்களும் வேதியரும்
கரங்குவிப்ப, வேலை என்னும்
மண்ணுமணி முழவதிர, வானரங்கில்
நடம்புரிவான் இரவி யான
கண்ணுதல்வா னவன்கனகச் சடைவிரிந்தால்
எனவிரிந்த கதிர்கள் எல்லாம். —கம்பர்

குறிப்புரை :

மறை - வேதம், கின்னரர் - தேவசாதியார், வேலை - கடல், இரவி - சூரியன், கனகம் - பொன்.

வினாக்கள் :

1. காலைக்கதிரின் தோற்றம் எவ்வாறு வர்ணிக்கப்பட்டுள்ளது?
2. பாவின் பொருள் யாது?

2. சோலைக் காட்சி

[இது ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்றான மணிமேகலையில் உள்ளது. இதன் ஆசிரியர் சீத்தலைச்சாத்தனார். இவர் காலம் கடைச்சங்க காலம்.]

கொம்பர்த் தும்பி குழலிசை காட்டப்
பொங்கர் வண்டினம் நல்லியாழ் செய்ய
வரிக்குயில் பாட மாமயில் ஆடும்
விரைப்பூம் பந்தர் கண்டுளஞ் சிறந்தும்,
புணர்துணை நீங்கிய பொய்கை அன்னமொடு
மடமயிற் பேடையும் தோகையும் கூடி
இருசிறை விரித்தாங்(கு) எழுந்துடன் கொட்பன
ஒருசிறைக் கண்டாங்(கு) உள்மகிழ் வெய்தி
மாமணி வண்ணனும் தம்முனும் பிஞ்ஞையும்
ஆடிய குரவையிஃ(து) ஆமென நோக்கியும்,

கோங்கலர் சேர்ந்த மாங்கனி தன்னைப்
பாங்குற விருந்த பல்பொறி மஞ்ஞையைச்
செம்பொன் தட்டில் தீம்பால் ஏந்திப்
பைங்கிளி யூட்டுமோர் பாவையாம் என்றும்,
அணிமலர்ப் பூம்பொழில் அகவயின் இருந்த
பிணவுக்குரங் கேற்றிப் பெருமத மழைக்கண்
மடவோர்க் கியற்றிய மாமணி ஊசல்
கடுவன் ஊக்குவது கண்டுநகை எய்தியும்
நெடுமுடிக் கிள்ளி மகிழ்வுடன் சென்றான்.

குறிப்புரை :

தும்பி - வண்டு, குழல் - புல்லாங்குழல், பொங்கர் - சோலை, விரை - வாசனை, துணை - பெண் அன்னம், பொய்கை - குளம், மணி வண்ணன் - கண்ணன், தம்முன் - தமையனான பலராமன், பிஞ்ஞை - நப்பின்னைப் பிராட்டியார், பொறி - புள்ளி, மஞ்ஞை - மயில், அகவயின் - நடுவிடம், பிணவு - பெண், கடுவன் - ஆண் குரங்கு.

வினாக்கள் :

1. நெடுமுடிக்கிள்ளி கண்டுளம் சிறந்த காட்சி யாது ?
2. அவன் உளம் மகிழ்வெய்தியது எப்பொழுது ?
3. அவன் கண்டு நகை எய்திய காட்சி யாது ?

3. முத்தொள்ளாயிரம்

['முத்தொள்ளாயிரம்' என்பது மூவேந்தர்தம் பெருமைகளை விளக்கிப் பாடப்பட்ட மூன்று தொள்ளாயிரம் பாடல்களையுடைய ஒரு நூலாகும். இந்நூலாசிரியர் யார் என்பது தெரியவில்லை. இந்நூல் முழுதும் கிடைக்கவும் இல்லை. சில பாடல்களே கிடைத்துள்ளன. இது கி. பி. பத்தாம் நூற்றாண்டிற்கு முற்பட்ட நூல் என்பது தெரிகிறது.]

யானை மறம்

சேரனது யானையின் வீரத்தைப் புகழ்ந்துரைக்கின்றது இப்பாட்டு.

வீறுசால் மன்னர் விரிதாம வெண்குடையைப்
பாற வெறிந்த பரிசயத்தால்—தேறுது
செங்கண்மாக் கோதை சினவெங் களியானை
திங்கள்மேல் நீட்டுந்தன் கை.

குறிப்புரை :

கோதை - சேரன், களியானை - மத மயக்கங்கொண்ட யானை, வீறு சால் - பெருமை மிகுந்த, தாமம் - முத்து மாலை, பாற - அழியுமாறு.

வினாக்கள் :

1. சேர மன்னனது யானையின் செயலை விளக்கி எழுதுக.
2. இச்செய்யுளில் அமைந்த புறப்பொருள் துறை யாது?

4. சீட்டுக் கவி

[செய்யுள் வடிவமாக எழுதும் கடிதத்திற்குச் 'சீட்டுக்கவி' என்பது பெயர். கீழ் வரும் செய்யுள், அந்தகக்கவி வீரராகவமுதலியார் என்பவர் குதிரை வேண்டிச் சேலத்தைப் பரிபாலித்து வந்த செழியதரையனுக்கு எழுதியது.]

ஏடாயி ரங்கோடி எழுதாது தன்மனத்(து)
எழுதிப் படித்தவிரகன்,
இமசேது பரியந்தம் எதிரிலாக் கவிவீர
ராகவன் விடுக்குமோலை,
சேடாதி பன்சிரம் அசைத்திடும் புகழ்பெற்ற
திரிபதகை குலசேகரன்
தென்பாலை சேலம் புரந்துதா கந்தீர்த்த
செழியன்எதிர் கொண்டுகாண்க :
பாடாத கந்தருவம் எறியாத கந்துகம்
பற்றிக்கொ லாத கோணம்
பறவாத கொக்(கு)அனற் பண்ணுத கோடைவெம்
படையில் தொடாதகுந்தம்
சூடாத பாடலம் பூவாத மாவொடு
தொடுத்துமுடி யாதசடிலம்
சொன்னசொல் சொல்லாத கிள்ளையொன்றெங்குந்
துதிக்கவர விடல்வேண்டுமே.

குறிப்புரை :

விரகன் - வல்லவன், இமம் - இமயமலை, சேது - இராமேச்சுரம், பரியந்தம் - வரை, சேடன் - ஆதிசேடன், சிரம் - தலை, திரிபதகை - கங்கை, செழியன் - பாண்டியன், கந்தருவம் - குதிரை (இசைப்பாட்டு), கந்துகம் - குதிரை (பந்து), கோணம் - குதிரை (வாள்), கொக்கு - குதிரை (ஒரு

பறவை), கோடை - குதிரை (வேனிற்காலம்), குந்தம் - குதிரை (வேல்)- பாடலம் - குதிரை (பாதிரி மலர்), மா - குதிரை (மாமரம்), சடிலம் - குதிரை (சடை).

வினாக்கள் :

1. 'சீட்டுக்கவி' என்பது என்ன?
2. இக்கவி எழுதிய சந்தர்ப்பம் யாது?
3. இப்பாட்டில் குதிரையைக் குறிக்கும் சொற்கள் எவை? அவற்றிற்கு வேறு பொருள்கள் எவை?

5. குடியரசு வாழ்த்து

[இதனைப் பாடியவர் கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை என்பவர். இவர் இக்காலத்துள்ள கவிஞர்களுள் சிறந்து விளங்குபவர்; நாகர்கோவிலை அடுத்துள்ள புத்தேரியில் வாழ்ந்து வருகின்றார்.]

ஆதி பகவன் அறவாழி அந்தணன்
யாதும் உவமையிலான் இன்னருளால்—ஓதுபுகழ்
இந்திய நாட்டில் எழுந்த குடியரசு
சந்ததம் வாழ்க தழைத்து. 1

*

ஈரம் இரக்கம் இல்லாமல் இருநூ றுண்டு தளராமல்
கோர ஆட்சி புரிந்தவரின் கொட்ட மடங்கக் காந்திமகா
வீரன் செய்த அறப்போரின் வெற்றி தந்த குடியரசு
பார தத்தில் நீடூழி பல்கிப் பெருகி வாழுகவே! 2

உண்ணும் உணவுக் கேங்காமல் உடுக்கும் ஆடைக் கலையாமல்
பண்ணும் தொழில்கள் பலகாண்போம் பஞ்சப் பேயைத் துரத்திடுவோம்
அண்ணல் காந்தி வழிபற்றி அகிலம் புகழ வாழ்ந்திடுவோம்
என்னும் அன்பர் உளம்தங்கும் ஈசா! துணைசெய் தருள்வாயே! 3

*

விண்ணவரும் கண்டு வியப்பரே மெச்சிநிதம்
மண்ணவரும் போற்றி மகிழ்வரே—'புண்ணியஞ்சேர்
இந்திய நாட்டில் எழுந்த குடியரசுக்(கு)
எந்தவர(சு) ஈடாகும்!' என்று. 4

குறிப்புரை :

ஆதிபகவன் - கடவுள், அறவாழி - அறக்கடல், அந்தணன் - அழகிய அருளை உடைய இறைவன், சந்ததம் - எப்பொழுதும், ஈரம் - தயவு, கோரம் - கொடுமை, அண்ணல் - பெருமை பொருந்திய.

வினக்கள் :

1. ஆங்கிலேயர் இந்நாட்டை ஆண்ட முறையைக் கவிஞர் எவ்வாறு குறிப்பிடுகின்ருர் ?

2. குடியரசு தோன்றுவதற்குக் காரணராய் இருந்தவர் யார் ?

3. நமது குடியரசில் மக்கள் எவ்வாறு வாழவேண்டும் என்று கவிமணி விரும்புகிருர் ?

4. மண்ணவர் நமது குடியரசை எவ்வாறு புகழ்வர் ?

உரை நடை

1. சாசனம் கூறும் கதை

[கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்கள்]

தமிழ் வளம் சுருங்கிய இடைக்காலத்திலுங்கூடத் தமிழர்கள் இந்தியாவின் பல்வேறிடங்களிலும் பரவிச் செழித்திருந்தார்கள் என்பதற்கு ஆதாரங்கள் காணப்படுகின்றன. இந்தியாவில் மட்டுமன்றி, வெளி நாடான **ஸயாம்** முதலிய இடங்களிலும் தமிழர்கள் அளித்த சாசனங்கள்—தமிழ் லிபியால் பொறிக்கப்பட்ட சாசனங்கள்—கிடைக்கின்றன. அவை பற்றிப் பின்னர்க் கூறுவோம்: இப்போது சென்னையினின்று ஏறக்குறைய ஐந்நூறு கல் தொலைவிலிருக்கும் தூய தெலுங்கு நாட்டுப் பகுதியான **விசாகப்பட்டினத்தி**லுள்ள ஒரு தமிழ்ச் சாசனம் பற்றிக் கூறுகிறோம்:

இதிலுள்ள ஒரு விசேஷம் என்னவென்றால், தெலுங்கு நாட்டிலுள்ள இத்தமிழ்ச் சாசனத்தைத் தோற்றுவித்தவன், இன்று மலையாள நாடாய்த்திகழும் மலபாரிலுள்ள ஒருவனுவன். **சங்கரச் செட்டி** என்பது அவன் பெயர். **பந்தளாயினிக் கொல்லம்** அவன் ஊர். மேலைக் கடற்கரையிலே **கொல்லம்** என்ற பெயரோடு இரண்டு ஊர்கள் இருக்கின்றன. பந்தளாயினிக் கொல்லம், வடமலபாரில் இருக்கின்றது. இது **கொயிலாண்டி** (Quilandi) என இப்பொழுது வழங்குகின்றது; ஏனையது, திருவிதாங்கூரின் நடுப்பகுதியில் இருக்கும் கொல்லம். இது சாசனங்களில் **குரக்கேணிக் கொல்லம்** என வழங்கப்படுவதைப் பார்க்கிறோம். இதனை ஆங்கிலேயர் **கொயிலான்** (Quilon) எனத் திரித்து வழங்குகின்றனர்.

பந்தளாயினிக் கொல்லம் என்றும் குரக்கேணிக் கொல்லம் என்றும் இருவிதமாக வழங்கப்படுவதன் காரணம் என்னவென்பது தெரியவில்லை. ஒரே பெயருடைய இரண்டு ஊர்கள் இருந்தால், ஒவ்வொன்றுக்கும் தனித்தனி சிறப்பான அடை மொழிகள் கொடுப்பது வழக்கம். இவ்வடைமொழி-

கள் பெரும்பாலும் அடுத்திருக்கும் ஊர்ப்பெயர்களாய் இருப்பதுண்டு. '**இரவி புதூர்**' என்ற பெயரோடு நாஞ்சில் நாட்டில் இரண்டு ஊர்கள் இருக்கின்றன. இவற்றைப் பிரித்தறிவதற்கு அடுத்திருக்கும் ஊர்களான கடுக்கரை, மருங்கூர் என்பவற்றோடு சார்த்திக் '**கடுக்கரை இரவி புதூர்**', '**மருங்கூர் இரவி புதூர்**' என்று குறிப்பிட்டுரைக்கும் வழக்கத்தைப் பார்க்கிறோம். இது போலவே, பந்தளாயினி, குரக்கேணி என்பவை இவ்விரு கொல்லங்களையும் அடுத்துப் பண்டை நாளில் இருந்த ஊர்களாயிருந்து, இவற்றின் அடைமொழிக்குப் பயன்பட்டிருக்கலாம் என்று ஊகிக்க இடமிருக்கிறது. சாசனத்தில் குறிப்பிட்டிருக்கும் சங்கரச் செட்டி, ஒரு தமிழன்; அல்லாவிட்டால், தெலுங்கு நாட்டில் சென்று தமிழ் மொழியில் தமிழ் வரி வடிவில் சாசனம் பொறித்திருக்க மாட்டான். விசாகப்பட்டினத்துக்குக் **குலோத்துங்க சோழ பட்டணம்** என்னும் ஒரு பெயருண்டு. அங்குள்ள **கருமாணிக்க ஆழ்வார்** கோவிலில் **சனிவார மண்டபம்** ஒன்று கட்டி வைத்தான் இவன். சிவன் கோவிலுக்குத் திங்கட்கிழமை போல, விஷ்ணு கோவிலுக்குச் சனிக்கிழமை விசேஷநாள். அந்நாளில் நடத்த வேண்டிய சிறப்புக்கு இடமான மண்டபமாய் இருக்க வேண்டும் இது. இது பற்றிய சாசனத்தைக் கீழே தருகிறோம் :

1. ஸ்வஸ்திஶ்ரீ சகரையாண்டு ஆயிரத்

2. தொருநூற்றெழுபத்திரண்டாவதில் வீரநார

3. சிங்க தேவ கிம் யாண்டு ௰௫ ஆவதில் பனகலாயின(?)

4. கொல்லத்து கண்டன் சங்கரைய செட்டியார் தர்மம்

5. விசாகபட்டணமான குலோத்துங்க சோழ பட்டணத்தில்க்கு.

6. ....ற்கு சனிவார மண்டபம் கட்டிவிச்சார் சங்கர செட்டியார்.

சகம் ஆயிரத்தொருநூற்றெழுபத்திரண்டு என்பது, கி. பி. 1250. இங்கே குறிப்பிடப்படும் அரசன் 13-ஆம் நூற்றுண்டில் ஒரிஸாவை ஆண்டு வந்த கங்க வமிசத்தைச் சேர்ந்த முதல் வீர நரசிம்மனாய் இருக்க வேண்டும். இவன்

ஆட்சி வருஷம் 15ல் இச்சாசனம் எழுகிறது. '**பனகலாயின**' என்றிருப்பதைப் '**பந்தளாயினி**' என்று படிக்க வேண்டும். இதைப் பதிப்பித்த விசாகப்பட்டினம் **திரு எஸ். பி. எல். நரசிம்மசுவாமி அவர்கள்,** தம்மூரில் தமிழ் அச்சுக் கிடையாமையால், நாகர லிபியில் பதிப்பித்துள்ளார். அவர் வாசித்தறிந்ததில் உள்ள தவறு கொஞ்சம், நாகர லிபிக்கு இயல்பாக அமைந்த குறை கொஞ்சம், இவ்வளவுங் கூடி இதனைப் 'பனகலாயின' என்று படிக்குமாறு ஆக்கிவிட்டன. இச்சொல்லில் மூன்ருவது எழுத்துத் 'த'வ்வாக இருக்க வேண்டும். தகரத்தின் கீழ்வரை சற்று மாய்ந்திருக்கலாம். அதனுல் அதனைக் 'க' எனக் கருதிவிட்டார் பதிப்பாசிரியர். அவ்வெழுத்துத் 'த'வ்வானுல், அதற்கு முன் எழுத்து 'ந்' என்பதுதான் என்பதற்குச் சந்தேகம் இராது. ஒற்றெழுத்தும் அகரமேறிய உயிர்மெய்யும் இடவேற்றுமையால் உணரப்படுவதன்றி, பெரும்பாலும் வரி வடிவில் வேற்றுமை காட்டுதல் நாகர லிபிக்கு இல்லை. ஆகவே, 'ந்' என்பது 'ன' என்று வாசிக்குமாறு உள்ளது. வடமொழியில் லகர ளகர பேதமில்லை என்பதும் யாவரும் அறிந்த ஒன்று. இறுதியிலுள்ள 'னி'ய்யின் இகர அடையாளத்தைக் கவனிக்காமல், 'ன' என்று எழுதியிருக்க வேண்டும். இப்படியாக இச்சொல் வாசித்தறியப்பட்டு, நாகர லிபிக்குப் போய்த் திரும்பத் தமிழுக்கு வரும்போது இத்துணை மாற்றங்கள் அடைந்து உருக்குலைந்துவிட்டது. இச்சாசனத்தைச் சார்ந்திருக்கும் மற்ருெரு கல்லில் உள்ள எழுத்துக்கள் மாய்ந்திருக்கும் தன்மையைப் பார்த்தால், நாம் இதில் வியப்படைய மாட்டோம். 'இச்சொல் ஒழிய ஏனைய சொற்களில் தடுமாற்றமில்லையே?' என்று கேட்கலாம். ஆம்; அவை பெரும்பாலும் பயின்று வரும் சொற்கள். ஆகவே, சிதைந்திருப்பினும் அவற்றை ஊகித்தறிவது எளிது. இஃது அன்னதன்று. ஆதலால், இப்பிழை நேர்ந்திருக்க வேண்டும். ஆயினும், அச்சொல் கொல்லத்துக்கு அடைமொழியான 'பந்தளாயினி' ஆகும் என்பதை ஐயமறத் தெரிந்துகொள்வோம்.

இச்சாசனத்தால் பதின்மூன்ரும் நூற்ருண்டில் மலபாரில் தமிழர்கள் குடியிருந்தார்கள் என்பதும், அவர்களில்

சிலர் விசாகப்பட்டினம் வரையிலும் சென்று தங்கினுர்கள் என்பதும் நாம் அறிந்துகொள்ளலாம்.

இச்சாசனம் இப்பொழுது விசாகப்பட்டினத்துப் பரவஸ்து ரங்காசாரியார் அவர்களுடைய வீட்டின் பக்கத்தில் இருக்கிறது. இவ்வூரின் தென்பாலுள்ள துர்க்க மலைச்சாரலில் ஓர் எழுத்துக் கல் காணப்பட்டது. அந்த இடத்தைத் தோண்டிப் பார்த்த பொழுது வேறு நான்கு எழுத்துக் கற்கள் காணப்பட்டன. ஆராய்ந்ததில் ஒரு கல்லில் பக்கத்துக்கு ஒன்ருக இரண்டு சாசனங்களும், ஏனைய நான்கு கற்களில் நான்கு சாசனங்களும் பொறிக்கப்பட்டிருந்ததாகத் தெரிய வந்தது. அவற்றுள் மூன்று தெலுங்கு; இரண்டு தமிழ்; ஆருவது சாசனம் இன்ன மொழியில் எழுதப்பட்டிருக்கிறதென்பதுகூட அறியமுடியாதபடி மாய்ந்துபோயிற்று. இன்னெரு தமிழ்ச்சாசனமும் பெரும்பாலும் மாய்ந்தே காணப்படுகிறது. இவ்விவரங்களெல்லாம் காட்டி, சாசனங்களையும் பெயர்த்தெழுதி, சில ஆண்டுகளுக்கு முன்னுல் திரு. எஸ். பி. எல். நரசிங்கசுவாமி அவர்கள் ஆங்கிலத்தில் ஒரு சிறு புத்தகம் வெளியிட்டார்கள். நான் அப்புத்தகத்தின் படி ஒன்றை அரிதின் முயன்று பெற்றேன். அதன் துணைக்கொண்டு இக்குறிப்பு இங்கே எழுதப்படுகின்றது.

அருஞ்சொற்பொருள் :

லிபி - எழுத்து, ஐயமற - சந்தேகம் நீங்க, சகம் - சாலிவாகன சகாத்தம், வியப்பு - ஆச்சரியம்.

வினுக்கள் :

1. விசாகப்பட்டினம் எங்குள்ளது ? அதன் வேறு பெயர் யாது ?
2. விசாகப்பட்டினத்திலுள்ள தமிழ்ச் சாசனத்தைத் தோற்றுவித்தவன் யார் ? அவனைப் பற்றி அறிந்ததை எழுதுக.
3. கொல்லம் என்னும் பெயரால் வழங்கும் ஊர்கள் எவை ? அவை இரு வித அடைமொழிகளோடு வழங்கக் காரணம் என்ன ?
4. விசாகப்பட்டினக் கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ள அரசன் யார் ?
5. அச்சாசனத்தின் 'பனகலாயின' என்பது எச்சொல்லின் திரிபாகும் ? இம்மாற்றத்திற்குக் கட்டுரை ஆசிரியர் கூறும் காரணம் யாது ?
6. விசாகப்பட்டினச் சாசனத்தால் அறிவது என்ன ?

2. வான் சிறப்பு

[ரா. தேசிகன் அவர்கள், B.A., B.L.]

உலகம் ஒழுங்காக நடப்பதற்கும், உலகத்துயிர்கள் நிலைத்து நிற்பதற்கும், அவ்வுயிர்களுள் உயர்ந்துள்ள மாந்தர் தம் அறம் பொருள் இன்பங்கள் செவ்வனே நடை-பெறுதற்கும் ஏதுவாயிருப்பது வானேயாகும்.

வான் எனப்படும் மழையினது சிறப்பு அளவிடற்கரியது. அதனை முற்றும் எடுத்தியம்புவதும் எளிதன்று. தெய்வப் புலவர் திருவள்ளுவனார் அச்சிறப்பினை நமக்கு ஒருவாறு சுருங்கக்கூறி விளங்க வைத்துள்ளார்.

மழையானது நீங்காமல் நின்று பெய்து வருதலால், உயிர்கள் நிலைபெற்று வருகின்றன. அங்ஙனம் உயிர்கள் நிலைபெற்று வருதலாலே அம்மழை அமிழ்தம் என்று கருதத்தக்கதாகும். மழை இருப்பதனாலேதான் உயிர்கள் உடல் தாங்கி இருக்கக் காண்கிறோம். மழை இல்லையேல், எவ்வுயிரையும் இவ்வுலகத்தின்கண் காண இயலாது. ஆதலால், உலகத்துயிர்களை நிலைபெறுத்துகின்ற மழை அமிழ்தத்திற்கு ஒப்பாகும். அமிழ்தம் தன்னையுண்டார்க்கு இறப்பைத் தவிர்த்து அவர்தம்மை நிலைபெறுத்துகின்றது போல, மழையும் உலகத்துயிர்களுக்கு உணவாகி, அவை மடிந்து மாயா வண்ணம் காத்து வருகிறது. இத்தகைய மழையை அமிழ்தம் என்பதற்குத் தடையுமுண்டோ ?

மாந்தர்களும் மற்ற உயிர்களும், உணவின்றேல் உயிர் வாழ முடியாது. அவ்வுணவுதானும் நீரின்றேல் அமையாது. உண்பவர்களுக்கு நல்ல உணவுகளை உண்டாக்கி அவ்வுணவு-களை உண்கின்றவர்களுக்குத் தானும் உணவாய் இருப்பதும் மழையேயாகும். உணவு பல வகைப்படும். எவ்வகை உணவேயாயினும் அது பக்குவ நிலைகொள்ளுவதற்கு ஆதார-மாயிருப்பது நீர். அந்நீரின் உதவியின்றேல், உயிர்கட்குத் தேவையான உணவு கிடைப்பது அரிது. உணவு கிடைக்-காத வழி உயிர்கள் பசியால் வாடி மடியும். மழை உணவினைத் தந்து பசியை நீக்குவதோடு உயிர்களது நீர்

வேட்கையையும் போக்கி அவை நிலைபெற்றுவரக் காரணமாயிருக்கிறது.

மழையானது பெய்ய வேண்டுங்காலத்தில் பெய்யாமல் பொய்க்குமானால், கடலால் சூழப்பட்ட இந்தப் பரந்த உலகத்தின்கண் பசியானது நிலைத்துநின்று உயிர்களை வருத்தும். இந்நிலவுலகம் கடலால் சூழப்பட்டிருக்கிறது. கடற்பரப்போ, நிலப்பரப்பைக்காட்டிலும் பெரிது. அதன்கண் உள்ள நீரின் அளவோ, சொல்லுந்தரமன்று. ஆழ்ந்தகன்ற கடலினது நீர் இருந்தும் யாது பயன் ? அந்நீர் உணவை உண்டாக்குமோ ? உணவாகத்தான் அமையுமோ ? மேலிருந்து மழை பெய்யாதாயின் உணவுப் பொருள்கள் உண்டாதலில்லை. இல்லாக்கால் உலகத்துயிர்கள் பசியாலும் நீர் வேட்கையாலும் துன்புறும் என்பதற்கு ஐயமுமுண்டோ ?

மழை என்கிற வருவாய் தன் பயன் குறையுமாயின், பயிரிடும் உழவர்கள் ஏர் கொண்டு தம் நிலத்தை உழமாட்டார்கள். தம் தொழிலால் தமக்கும் பிறர்க்கும் உணவு தேடும் உழவர்கள் எப்பொழுதும் வானை நோக்கியே இருப்பது வழக்கம். அவர்கள் தொழிலுக்கு இன்றியமையாதது நீரன்றோ? அந்நீரை எதிர்பார்த்திருக்கும் அவர்கட்கு உரிய காலங்களில் மழை பெய்து உதவி செய்யாதாயின், அவர்கள் எங்ஙனம் ஏர் கொண்டு உழுவார்கள் ? உழவர்கள் ஏர் பிடித்து உழாத போது புலங்கள் வளம் பெறுதலில்லை. பயிர்களும் விளையாதொழியும் ! விளைவு இல்லாத போது உணவும் இல்லையன்றோ ? உணவில்லாத வழி உலகம் ஏது ?

உலகத்தின்கண் வாழ்வாரைப் பெய்யாது நின்று கெடுப்பதும், அவ்வாறு கெட்டவர்க்குத் துணையாக இருந்து தகுதியாகப் பெய்து, முன் கெடுத்தது போலவே அவர்களைக் கைதூக்கிவிட்டு வாழ்விப்பதும் ஆகிய இவையெல்லாம் செய்ய வல்லது மழையேயாகும். மழை பெய்யாதொழியின், உழவர் ஏர் கொண்டு உழார் என்பதைக் கண்டோம். அதனால் அவரும் மற்றையோரும் கேடுறுவர். பெருந்திரு உடையராயினும், அவர் அழிவு தடையுறுதலில்லை. அப்படிக் கெட்டழிந்த நிலையில் மழை பெய்யுமேல், அவ்வுழவர் தம் தொழிலை மீண்டும் மேற்கொள்வர். அவரிழந்த வளத்தை

அம்மழையின் உதவியால் திரும்பப் பெறுவர். பிறரும் நலமுறுவர். மழையின்மையால் மக்கள் வளங்குன்றி அழிதலேயும், மழையுண்மையால் அங்ஙனம் அழிந்தவர்கள் மீண்டும் வளம் பெற்று வாழ்தலேயும் நாம் கண்கூடாகக் கண்டு வருகிருேம். மக்கள் கேட்டிற்கும் ஆக்கத்திற்கும் காரணமாயிருப்பது மழைதான் என்பது அறியற்பாற்று.

வானத்தினின்று நீர்த்துளிகள் பூமியில் விழுந்தால்தான் புல் முதலியவற்றைக் காணலாகும்; அத்துளிகள் விழாமற்போகுமேயாளுல், அந்த இடத்திலே பசும்புல்லினது தலேயையும் காணுதல் அரிது. புல் முளேயவே முளேயாது. ஓரறிவுடைய புல்லே மழைத்துளியின்றி உண்டாகாதெனின் மற்றைய உயிர்களின் நிலேயைப்பற்றி நினேக்க வேண்டுவதே இல்லே. இதனுல், மழையின் இன்றியமையாமை எத்தன்மைத்து என்பதை நாம் நன்கு உணர்கிருேம்.

மழையானது உலகத்து நிலப்பகுதிக்குத்தான் வேண்டுமென்பது மாத்திரமன்று. நீர்ப்பகுதியாகிற கடலுக்கும் வேண்டும். மேகமானது கடலின்கண் நீரை முகந்து மேலேறிச் சென்று பரவிப் பலவிடங்களிலும் மழையைச் சொரிகிறது. என்ருலும், அம்மழை நிலத்தோடமைந்து விடுமாயின், மேகத்துக்கு ஆதாரமாயிருந்த கடலும் தனது வளத்தில் குறைந்துவிடும். அவ்வளம் குறையாதிருக்கவே கடலுக்கும் மழை வேண்டுவதாயிருக்கிறது. கடலுக்கு முந்நீர் என்கிற ஒரு பெயருண்டு. மழை நீர் இல்லேயேல், அப்பெயர் பொருளற்றுப்போகும். கடலில் மழை பெய்தாற்ருன் முத்து முதலிய பொருள்கள் உண்டாகும்; கடல் வாழ் உயிர்கள் சிறந்து விளங்கும். மழைக்கு முதலாக இருக்கின்ற கடலுக்கும் மழை வேண்டுமெனின், மற்றவற்றிற்கு அம்மழை வேண்டுமென்பதைக் கூறவும் வேண்டுமோ ?

மழை பெய்யாதொழியின், உலகத்துயிர்கள் மாத்திரந்தாமா நலமிழக்கின்றன ? தேவர்களுக்கும் இவ்வுலக மக்களாற் செய்யப்படும் திருவிழாக்களும் பூசைகளும் நடைபெற மாட்டா. மழை பெய்து உலகம் வளம் பெற்றிருந்தாலன்ருே திருவிழாக்களிலும் பூசைகளிலும் மக்கள் கருத்தைச் செலுத்துவார்கள் ? மக்களே வளமிழந்து வாழ்வு குன்றி

வருந்துவார்களானுல், விழாக்கள் நடத்துவதும் பூசனைகள் புரிவதும் அவர்களால் ஒரு சிறிதும் இயலாவென்பது திண்ணம்.

தேவர்களுக்குரிய சிறப்புக்கள் ஒரு புறமிருக்க, மழை பெய்யாதாயின், இந்த அகன்ற உலகத்திலே தானமும் தவ-மும் ஆகிய இவையிரண்டும் நிகழாமற் போய்விடும். தானம் இல்லறத்தைச் சார்ந்தும், தவம் துறவறத்தைச் சார்ந்தும் இருப்பன என்பர் பெரியோர். அறநெறியால் ஈட்டிய பொரு-ளைத் தக்கார்க்கு மனமகிழ்ச்சியுடன் தருவதே தானம் எனப்-படும். ஐம்பொறி வழிகளில் மனம் சென்று அலையாது ஒரு நெறியில் நிற்கும்பொருட்டு விரதங்கள் மேற்கொண்டொழுகு-வது தவமாம். மழையின்றேல், இல்லற முறை பற்றிய முன்னதற்கும், துறவற முறை பற்றிய பின்னதற்கும் பழுது நேரும். மழையின்மையால் உயிர் வாழ்வதற்கு இன்றியமை-யாத உணவு கிட்டாதாகி வறுமை வாட்டுங்கால், தானத்தை-யும் தவத்தையும் எவரும் எண்ணுர்.

எவ்வகையான மேன்மையுடையாருக்கும் நீர் இல்லா-மற்போயின், உலகியல் பொருந்தாது. அப்படிப் பொருந்தா-தெனின், அந்நீர் ஒழுகும் ஒழுக்கும் மழையில்லாமற்போயின் பொருந்தாதாம். நீரில்லாமல் பொருளும் அதனுலாய இன்ப-மும் அமையுமா ? அமையவே அமையா. நீரினுல் உலகியல் பற்றிய பொருளும் இன்பமும் அமையுமெனின், மழையினுல் அந்நீர் உளதாதல் அமையும்.

இதுகாறும் கூறியவாற்ருல் மழையானது அமிழ்தத்திற்கு ஒப்பானதென்பதும், உணவுப் பொருள்கள் யாவற்றையும் உண்டாக்கித் தந்து, தானும் உணவாகப் பயன்பட்டு, உயிர்-களின் பசியையும் நீர் வேட்கையையும் நீக்குகின்றதென்ப-தும், மழை இல்லையாயின் உயிர்கள் பசியால் வருந்துமென்-பதும், உழவர் ஏர் கொண்டு உழுதொழில் செய்யாரென்பதும், மக்கள் ஆக்கத்திற்கும் அழிவுக்கும் மழையே காரணமென்ப-தும், மழைத் துளி நிலத்தில் வீழ்ந்தாலன்றிப் புல் முதலியன தோன்ருவென்பதும், நிலமேயன்றிக் கடலுக்கும் மழை வேண்டுமென்பதும், மழை இல்லையேல் தேவர்கட்கும் சிறப்-பும் பூசனையும் நடவா என்பதும், தானமும் தவமும் தடைப்-

படுமென்பதும், நீர் இல்லாமல் உலகியல் அமையாததைப் போன்று மழையில்லாது நீர் ஒழுக்கும் அமையாதென்பதும் பெறப்பட்டன.

அருஞ்சொற்பொருள் :

ஏது - காரணம், வான் - மழை, புலம் - வயல், ஆக்கம் - செல்வம், பழுது - குற்றம்.

வினாக்கள் :

1. மழையை ‘ அமிழ்தம் ’ என்பது எவ்வாறு பொருந்தும் ?
2. மழை நமக்கு எவ்வாறெல்லாம் பயன்படுகிறது ?
3. மழை பெய்யாது பொய்த்தால் விளையும் கேடுகள் யாவை ?
4. மழை இன்றியமையாதது என்பதை விளக்குக.
5. கடலுக்கும் மழை வேண்டும் என்பதைத் தெளிவுபடுத்துக.
6. மழை இல்லாவிட்டால், தானம், தவம் என்ற இரண்டும் பழுது-படும் என்பதை விளக்குக.
7. இப்பாடத்தால் நாம் அறிந்துகொள்வன யாவை ?

3. பணமும் பஞ்சமும்

[டாக்டர் R. K. சண்முகம் செட்டியார் அவர்கள்]

ஆறுமுகம் செட்டியாருடைய பங்களாவில் ஒரு விசாலமான அறை. இந்த அறை மிகவும் அழகாய் அமைந்திருக்கிறது. அறையின் நான்கு பக்கத்துச் சுவரிலும் புத்தகங்கள் நிறைந்த அலமாரிகள். அலமாரிகளெல்லாம் சுவரோடு சேர்ந்து வெகு அழகாக அமைக்கப்பட்டிருக்கின்றன. சுமார் 3000 புத்தகங்கள் இருக்கலாம். அறையின் ஒரு புறத்தில் பெரிய மேசை. அன்றலர்ந்த ரோஜா மலர் மேசையை அலங்கரிக்கிறது. வெகு நேர்த்தியான பச்சைத் தோலினுல் மூடிய பெரிய நாற்காலிகள் இங்குமங்கும் இருக்கின்றன. எங்கே பார்த்தாலும் சுத்தமாகவும், மனத்திற்கு ரம்மியத்தைக் கொடுப்பதாகவுமே இருக்கின்றது. செட்டியார் ஒரு நாற்காலியில் அமர்ந்து ஏதோ ஒரு புத்தகத்தைப் படித்துக்கொண்டிருக்கிருர். நேரம், காலை பத்து மணி.

வேலுசாமி நாயுடு வெகு அவசரமாக அறைக்குள் வருகிருர். காகிதத்தில் சுருட்டிய ஏதோ ஒரு சிறிய சாமான் நாயுடுவின் கையில் இருக்கிறது. அதை மேசையின்மேல் வைத்துவிட்டு அவரும் ஒரு நாற்காலியில் உட்காருகிருர்.

ஆறுமுகம் செட்டியார்: என்ன வேலுசாமி நாயுடு, உலகத்தையே வெறுத்துவிட்டவர்போல இருக்கிறதே உங்கள் முகத்தைப் பார்த்தால்! என்ன சமாசாரம்?

வேலுசாமி நாயுடு: சரிதான் சார்! இப்படியே போய்க்கொண்டிருந்தால், சனங்கள் எப்படிப் பிழைப்பதோ தெரியவில்லை. பற்பொடி ஒரு டப்பி வாங்கக் கடைக்குப் போயிருந்தேன்; இதோ மேசையின்மேல் வைத்தேனே அதுதான். முன்பு ஒரு ரூபாய் விலைக்கு விற்ற ஒரு டப்பி இப்பொழுது நாலு ரூபாய்!

செட்டியார்: அடடா! இதற்குத்தானு இவ்வளவு சலிப்பு? சண்டைச் சமயத்தில் சாமான்கள் கிடைப்பதென்ருல் கஷ்டந்தான்.

நாயுடு: வெளி நாடுகளிலிருந்து சாமான்கள் வருவது குறைந்துவிட்டபடியால் அவைகளுக்கு விலை ஏறுவது நியாயம் என்பதை ஒப்புக்கொள்கிறேன். உள்நாட்டுச் சாமான்களுக்குங்கூட ஏன் இப்படி விலை அதிகமாக வேண்டும்?

செட்டியார்: சண்டைச் சமயத்தில் பொதுவாக

விலை வாசிகள் அதிகமாவதற்கு இரண்டு முக்கிய காரணங்களுண்டு: (1) பட்டாளங்களின் தேவைக்கும், நம்முடைய பக்கம் சண்டை செய்யும் நேச நாடுகளுக்கு அனுப்புவதற்கும் நம்முடைய சர்க்காரே கோடிக் கணக்காகச் சாமான்கள் வாங்குகிறது. அதனால், பொது ஜனங்களுக்கு வேண்டிய அளவு சாமான் கிடைப்பதில்லை. (2) ஜனங்களிடத்தில் பணம் அதிகமாய்விட்டது. கையில் பணம் ஏராளமாக இருக்கும் போது, ஒன்றுக்கு இரண்டாக விலை கொடுத்து வாங்கப் போட்டி ஏற்படுகிறது. கிடைக்கும் சாமான்களோ, கொஞ்சந்தான். அவைகளை வாங்குவதற்குப் போட்டி அதிகம். முடிவில் விலை ஏறிவிடுகிறது.

நாயுடு: சர்க்கார் அவ்வளவு சாமான்கள் வாங்குகிறதா, என்ன?

செட்டியார்: சண்டை ஆரம்பத்திலிருந்து, அதாவது 1939-ஆம் வருஷம் செப்டெம்பர் மாதத்திலிருந்து, 1942-ஆம் வருஷம் டிஸம்பர் மாதம் வரையில் சர்க்கார் சப்ளை இலாக்கா மூலமாக 455 கோடி ரூபாய்க்குச் சாமான்கள் நம் நாட்டில் வாங்கியிருக்கிறது. இப்போதும் மாதம் ஒன்றுக்குச் சுமார் 20 கோடி ரூபாய்க்குச் சாமான்கள் வாங்கிக்கொண்டேயிருக்கிறது.

நாயுடு: அப்படியா! சர்க்காரே மாதம் 20 கோடி ரூபாய்க்குச் சாமான் வாங்கினால், ஜனங்கள் பாடு திண்டாட்டந்தான். அது இருக்கட்டும் சார்! விலைகள் ஏறிவிட்டதற்கு இன்னொரு காரணம் இருக்கிறதென்று பத்திரிகைகளில் எழுதுகிறார்களே! அதாவது, சர்க்கார் கரன்ஸி நோட்டுக்களை ஏராளமாய் அச்சுப்போட்டு வெளியிட்டுவிட்டதென்று சொல்லுகிறார்களே! அந்த விவரம் என்ன?

செட்டியார்: அதுவும் உண்மைதான், 1939-ஆம் வருஷம் ஜனவரி மாதக் கணக்கைப் பார்த்தால், அப்போது 203 கோடிரூபாய் நோட்டுக்களே ஜனங்கள் கையிலிருந்தன. இப்போது 734 கோடி ரூபாய் நோட்டுக்கள் உபயோகத்திலிருக்கின்றன.

நாயுடு: ரொம்ப பேஷ்! நமக்குப் பணம் தேவையானால் கஷ்டப்பட்டுச் சம்பாதிக்க வேண்டும். சர்க்காருக்குப்

பணம் வேண்டுமானால் நோட்டுப் போட்டுக்கொண்டால் போதும் போல இருக்கிறது!

செட்டியார்: அப்படியில்லை நாயுடுகாரு. சர்க்கார் இஷ்டப்பட்ட போதெல்லாம் நோட்டுக்களை அச்சடித்து எடுத்-துக்கொள்ள முடியாது. சர்க்கார் அச்சுப்போடும் ஒவ்வொரு நோட்டுக்கும், கஜானாவில் ஆதாரம் இருக்க வேண்டும்.

நாயுடு: அது என்ன ஆதாரம் சார்?

செட்டியார்: சொல்லுகிறேன் கேளுங்கள்: எவ்வளவு நோட்டுக்கள் சர்க்கார் வெளியிடுகிறதோ, அவ்வளவுக்கும் தங்கம், வெள்ளி, நாணயங்கள், கவர்ன்மெண்டு பாண்டு—இப்படிப்பட்ட ஆதாரம் வேண்டும். இவ்விதமான ஆதாரங்க-ளில்லாமல் ஒரு நோட்டுக்கூட வெளியிடச் சர்க்காருக்கு அதி-காரமில்லை. இதைப்பற்றி ஒரு சட்டம் ஏற்பட்டிருக்கிறது. இந்தச் சட்டத்தைச் சர்க்கார் மீறி நடக்க முடியாது. இப்-போது 734 கோடி ரூபாய் நோட்டுக்கள் வெளியிலிருக்கின்றன என்று சொன்னேனல்லவா? இதற்கு ஆதாரமாக இந்தத் தேதியில் சர்க்கார் கஜானாவில் 45 கோடி ரூபாய் தங்கம், 15 கோடி ரூபாய் வெள்ளி நாணயங்கள், 120 கோடி ரூபாய் பெறுமான இந்தியா கவர்ன்மெண்டு பாண்டுகள், 554 கோடி ரூபாய் பெறுமான பிரிட்டிஷ் கவர்ன்மெண்டு பாண்டுகள்—இவைகளெல்லாம் ஆதாரமாயிருக்கின்றன.

நாயுடு: அப்படியா சமாசாரம்! இது இருக்கட்டும். இப்போது 734 கோடி ரூபாய் நோட்டுக்கள் வெளியிலிருக்-கின்றனவென்று சொன்னீர்களே, எதற்காக இவ்வளவு நோட்டுக்களைச் சர்க்கார் வெளியிட்டது?

செட்டியார்: பிரிட்டிஷ் கவர்ன்மெண்டின் சார்பாக நமது இந்தியா கவர்ன்மெண்டு கோடிக்கணக்காக நம் நாட்டில் சாமான்கள் வாங்கவேண்டியிருக்கின்றது. இந்தச் சாமான்-களுக்கெல்லாம் கிரயம் கொடுக்கப் பணம் வேண்டுமல்லவா? பிரிட்டிஷ் கவர்ன்மெண்டாரல்லவா கிரயப்பணம் கொடுக்க வேண்டும்? பிரிட்டிஷ் கவர்ன்மெண்டாரிடத்தில் அவர்கள் தேசத்து நாணயந்தானே இருக்கிறது? நம்முடைய நாணயத்-திற்கு ரூபாய் என்பது பெயர். ஒரு ஸ்டர்லிங் என்றால் ரூபாய் 13-4-0. பிரிட்டிஷ் கவர்ன்மெண்டுக்காக நம்முடைய சர்க்கார்

13,250 ரூபாய்க்குப் பஞ்சு வாங்குகிறதென்று வைத்துக்-கொள்வோம். பிரிட்டிஷ் கவர்ன்மெண்டு இந்தப் பஞ்சுக்காக 1000 ஸ்டர்லிங்கை லண்டனில் இந்தியா மந்திரியிடம் கொடுத்துவிடுகிறது. இந்த 1000 ஸ்டர்லிங்கை ஆதார-மாக வைத்துக்கொண்டு 13,250 ரூபாய்க்கு நோட்டுக்கள் அச்-சடித்துப் பஞ்சின் கிரயத்தை நம் வியாபாரிகளுக்குக் கொடுத்து வைக்கிறார்கள். நம்முடைய நோட்டுக்களுக்கு இப்போது 554 கோடி ரூபாய் பெறுமான பிரிட்டிஷ் கவர்ன்மெண்டு பாண்டுகள் ஆதாரமாயிருக்கின்றனவென்று சற்று முன்னே சொன்னேனல்லவா? இந்த விதமாய்த்தான் இந்த பாண்டுகள் ஆதாரமாக வந்து சேர்ந்தன.

நாயுடு: அப்படியானால், சண்டை முடிவாகும் வரை-யில் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் நம் நாட்டில் இன்னும் சாமான்கள் வாங்கிக்கொண்டேயிருப்பார்கள். அவர்கள் சாமான்கள் வாங்க வாங்க, நோட்டுக்களும் அதிகமாய்க்-கொண்டே போகும் போல இருக்கிறதே!

செட்டியார்: நீங்கள் சொல்வது உண்மைதான். 1942-ஆம் வருஷம் ஜூன் மாதத்திலிருந்து 1943-ஆம் வருஷம் ஜூன் மாதம் வரையில் ஒரு வருஷத்தில் 285 கோடி ரூபாய் நோட்டுக்கள் அதிகமாய்விட்டன. இப்போது மாதம் ஒன்றுக்கு 12 கோடி முதல் 15 கோடி வரையில் அதிகமாகிக் கொண்டே போகிறது.

நாயுடு: இப்படியே போய்க்கொண்டிருந்தால் இன்னும் விலை வாசி அதிகமாகும். இதைத் தடுப்பதற்குச் சர்க்கார் என்னதான் செய்கிறது?

செட்டியார்: சர்க்கார் ஏதோ சில முயற்சிகள் செய்து கொண்டுதான் இருக்கிறது. இந்த முயற்சிகளின் முக்கிய நோக்கம் ஜனங்களிடமிருந்து பணம் சர்க்கார் கையில் போய்ச் சேரும்படி செய்வதுதான். (1) வரிகளை அதிகப்-படுத்தியிருக்கிறார்கள். (2) வரிகளைத் தாமதமில்லாமல் வசூல் செய்யவேண்டிய ஏற்பாடுகள் செய்திருக்கிறார்கள். (2) மில் போன்ற பெரிய கைத்தொழில் கம்பெனிகள் பங்குதாரர்-களுக்கு அதிகமாக லாபத்தைப் பிரித்துக் கொடுக்காமலிருக்-கும்படி, வந்த லாபத்தில் வரிபோக 100க்கு 13 வீதம் சர்க்கா-

ரிடம் டிபாசிட்டுச் செய்யவேண்டுமென்று கட்டாயச் சட்டம் செய்திருக்கிறார்கள். (4) கவர்ன்மெண்டு பாண்டுகளில் பணத்தைப் போடும்படி ஜனங்களைப் பல விதத்தில் தூண்டுதல் செய்கிறார்கள். (5) துணி, நூல், அரிசி முதலிய பண்டங்களை இன்ன விலைக்குமேல் விற்பனை செய்யக்கூடாதென்று உத்தரவு இட்டிருக்கிறார்கள். சர்க்கார் உத்தரவுகள் ஒரு புறம் இருக்கட்டும். உங்களைப் போன்றவர்கள் அவசியமில்லாத சாமான்களை வாங்காமலும் இருக்க வேண்டும். 4 ரூபாய் விலை கொடுத்து ஒரு டப்பிப் பற்பொடி நீங்கள் ஏன் வாங்கவேண்டும் ? பல் குச்சியினால் பல்லைச் சுத்தம் செய்யக் கூடாதோ ?

நாயுடு : நல்ல வேலை சார் ! என்னுடைய பல்லெல்லாம் கோணையென்று இப்போதே நண்பர்கள் கேலி செய்கிறார்கள். பற்குச்சியைப் போட்டு, இன்னும் என்னுடைய பற்கள் போய்விட்டால் உங்களுக்குத் திருப்தியாயிருக்கும் போலிருக்கிறது ! அதிருக்கட்டும். நீங்கள் இதுவரையில் சொல்லி வந்த விஷயங்கள் மிகவும் முக்கியமானவை. இது விஷயமாய் இன்னும் சில கேள்விகள் கேட்கலாமோ ?

செட்டியார் :—மற்றக் கேள்விகளை நாளைக்கு வைத்துக்கொள்வோம். இப்போது சாப்பிடும் நேரம் ஆய்விட்டது. எழுந்திருங்கள் போய்ச் சாப்பிடலாம்.

(இருவரும் எழுந்து உள்ளே போகின்றனர்.)

அருஞ்சொற்பொருள் :

சமாசாரம் - செய்தி, கிரயம் - விலை, கோணை - வளைவு.

வினாக்கள் :

1. சண்டைச் சமயத்தில் விலை வாசி ஏறுவதற்குரிய முக்கிய காரணங்கள் எவை ?

2. சண்டைச் சமயத்தில் விலை வாசி ஏறியதற்கு நாயுடு கூறிய வேறொரு காரணம் யாது ? அதன் உண்மை என்ன ?

3. சர்க்கார் வெளியிட்டுள்ள கரன்ஸி நோட்டுக்களுக்குக் கஜானாவில் என்னென்ன ஆதாரங்கள் வைத்துள்ளனர் ?

4. யுத்த காலத்தில் இந்திய சர்க்கார் கரன்ஸி நோட்டுக்களை அதிகமாக வெளியிட்டமைக்குரிய முக்கிய காரணத்தை விளக்குக.

5. விலை வாசி ஏற்றத்தைத் தடுப்பதற்குச் சர்க்கார் என்னென்ன செய்கிறது ?

4. இயற்கையின் தண்ணளி

[G. மைக்கல் பிள்ளை அவர்கள், M.A.]

ஈத்துவக்கும் இன்பம் ஒன்றனையே கருதித் தாம் ஈட்டிய பொருளை இரவலர்க்கு ஈந்து, வண்புகழ் கொண்ட வள்ளல்கள் பலர் நந்தமிழ் நாட்டில் வாழ்ந்தனரென்பதை நூல் வாயிலாக அறிகின்றோம். அவர்கள் ஈதல் இயையாவிடத்துத் தம் இன்னுயிர் விடும் தன்மையர்; 'பொருளீட்டியதன் பயன் ஈதலே,' என்ற உண்மையை உய்த்துணர்ந்தவர்; ஈதலையே பெருங்குணமாகக் கொண்டொழுகியவர்; 'வறுமையினும் வறியார்க்கீயாமை கொடிது' எனும் மனப்பண்பு வாய்ந்தவர். அவர்களை முதல், இடை, கடையெழு வள்ளல்களாகப் பிரித்து, அவர்கள் புகழைப் பரப்புவன தமிழ் நூல்கள். அவர்களுடன் தம் ஈகையால் ஒப்பிடத்தக்க புரவலரும் இருந்தனர்.

"ஈயென இரக்குவ ராயின், சீருடை
முரசுகெழு தாயத்து அரசோ தஞ்சம்!
இன்னுயி ராயினும் கொடுக்குவன்."

என்றனன் வளவன் நலங்கிள்ளி. வளவன் சூழ்ச்சியால் வந்த சேணியனுக்குத் தம் பொன்யாவும் வழங்கிப் பின்வந்த புலவர்க்கு 'இல்லை' எனக் கூறல் இழிவென்றஞ்சி, நாகப்புற்றினுள் தம் கையைச் செலுத்தித்தம் இன்னுயிர் மாய்க்கத் துணிந்தனர் புதுவைச் சடையப்பர். இத்தகையாரின் பிறப்பிடமாய், உறைவிடமாய், உற்றவர்க்குதவும் தனியிடமாய்த் தனிப்புகழ் தாங்கி நிற்பது நம் தாயகமாகிய தமிழ் நாடு.

'சோழ வளநாடு சோறுடைத்து,' எனப் பொன் கொழிக்கும் பொன்னியின் கொடைச் சிறப்பைப் பெறும் நாட்டைப் புகழ்ந்தனர் புலவர். இது போன்று இயற்கை அன்னையின் தடையிலாது செல்லும் தண்ணளியின் திறன் விளக்குவன ஒரு சில பாக்களே தமிழ் உலகில் உலவுவன. ஊன்றி நோக்குங்கால், 'மக்களின் உளப்பண்பிற்கு உரன் நல்குவது அவர் உறையும் நிலத்தின் வளமே,' என்பது விளங்கும்.

பாலை என்னும் படிவங்கொள்ளும் வளமிழந்த நிலத்துறைவாருள் பகிர்ந்துண்பார் பலர் காணப் பெருமையும், வளமிக்க பண்டை நாளில் வருவிருந்தோம்பி வாழ்ந்த தமிழ் நாட்டில் வறுமை காரணமாய் மக்கள் விருந்து பிரிந்து செல்ல எதிர்பார்க்கும் இழிநிலை காணப்பெறுதலும் இதனை வலியுறுத்தும். ஆதலின், 'இயற்கை அன்னையே ஈதற்சிறப்பு வாய்ந்தவள்,' என்பது போதரும்.

உயிர்களுக்கு—சிறப்பாக மக்களுயிர்க்கு — உண்ண உணவும் உடுக்க உடையும் உதவும் பெருமை இயற்கை அன்னைக்கே உரித்து. மேற்கு ஆப்பிரிக்காவில் வெண்ணெய் மரங்கள் வளர்கின்றன. அவற்றினின்றும் அந்நிலத்தில் வாழும் மக்கள் வெண்ணெய் பெறுகின்றார்கள். பசு, எருமை முதலிய விலங்குகளின் பாலைக் காய்ச்சிப் பின்னர்க் கிடைக்கப் பெறும் வெண்ணெயினும் இவ்வியற்கை வெண்ணெய் சாலச்சிறந்ததாகும். இதனை **'ஷீவெண்ணெய்'** என வழங்குவர். இஃதன்றிப் பிரேஸில் நாட்டில் தயிருதவும் தருக்கள் உள்ளன. அவை **'கார்னௌபா'** எனவும், **'பாலாடை காப்பிப்பானத் தரு'** எனவும் வழங்கப்படுகின்றன. அம்மரங்களின் விதைகள் காப்பிப்பானம் தயாரிக்க உதவுகின்றன. அடி மரத்தின் சாறு குழந்தைகளுக்கு உணவாகின்றது. அச்சாற்றைப் பாத்திரங்களில் ஊற்றிச் சிறிது நேரம் உலரவிட, உறைந்த தயிராகின்றது. மக்கள் அதைக் கடைந்து பயன்படுத்துகிறார்கள். மெக்ஸிக்கோ நாட்டில் **'பிஸ்னகா'** என்னும் குழைக்கள்ளியினின்றும் மக்கள் குடிநீர் பெறுகின்றார்கள். இக்கள்ளிகளின் மேற்பாகத்தைக் கத்தியால் அரிந்துவிடின், உள்ளே இரண்டு மூன்று குவார்ட்டர் அளவுள்ள தெளிந்த நீர் காணப்படும். நமது நாட்டில் வாழைமரத் தண்டுகளில் நீர்த்துளிகள் காணப்படுகின்றன. அவற்றைக் குடிநீராகப் பயன்படுத்த முடியாது. ஆயின், **'ஈக்குவாட்டர்'** என்னுமிடத்தில் காணப்படும் **விசிறி வாழை**, மடல்தோறும் நீர் நிறைந்து, மக்கள் பயன்படுத்துமளவிற்கு நீர் உதவுகின்றது.

இவ்வாறு, மக்கள் முயற்சியின்றி மரங்களினின்று உணவும் நீரும் பெற இயற்கை அன்னை உதவுகின்றாள்.

ஆப்பிரிக்காக் கண்டத்தில் 'ஜெரானிடா' என்னுமிடத்தில், மலைச்சரிவுகளில் சட்டை மரங்கள் உள்ளன. அவை சுமார் ஐம்பதடி உயரம் வளரும். அவற்றின் அடி மரத்தின் பட்டைகள் மக்கள் அணிவதற்குரியனவாகின்றன. வட்ட வடிவமாக இரண்டடி நீளத்துக்கு அம்மரத்தின் மேற்றோலை வெட்டியெடுத்து, இரு புயங்களுக்கும் இரு துவாரங்கள் செய்து, தைக்கப்பெருத சட்டைகளாக அணிந்து கொள்ளலாம். இங்குள்ள மக்கள் பொருள் செலவில்லாது இவ்வாடைகளை அடைகின்றூர்கள். நாகரிகமுள்ள மக்கள் மின்சார விளக்குகள் ஒளி செய்யத் தங்கள் இல்லங்களில் வாழ்கின்றூர்கள். அமெரிக்காக் கண்டத்தின் வடமேற்குப் பாகத்தில் வாழும் மக்கள், மெழுகுவத்தி மீனின் முதுகில் ஒரு வித மரப்பட்டையைச் செலுத்தி எரிகொளுவுதலால், அது எண்ணெய் ஊற்றப்பெற்ற விளக்கினையொப்ப ஒளிவீசி எரிகின்றது. உணவு உடை உதவும் பண்புடன், ஒளியுதவும் விசித்திரமும் இயற்கையன்னையின் ஈதற்றிறனுயமைகின்றது.

கடலிற்செல்லும் கப்பல் மாலுமிகளுக்குத் திசை காட்டும் கருவி இன்றியமையாததாம். அதனைப் போல அமெரிக்காவில் திசை காட்டும் மரங்கள் பெருவெளிகளிற் செல்லும் வழிப்போக்கர்களுக்குப் பேருதவி புரிகின்றன. அவற்றின் தென்வடலாய் அமைந்த இலைகள், வழி தவறியவர்களுக்கு நேர் வழி காட்டி, அவர்கள் துன்பம் துடைக்கின்றன. அல்ஜீரியாவில் காணப்படும் அஞ்சன ஆறு, 'டானின்' என்னும் இரும்பு மை பெறுவதற்கு இடனுயமைந்துள்ளது.

ஸ்வீடன் நாட்டிலும் ஆஸ்திரியாவிலும் இரும்பு மலைகள் சுத்தமான இரும்பைக் கொடுத்து உவுகின்றன. பொலிவியாவிலுள்ள 'கெரோடிபொடாசி' என்னும் வெள்ளி மலை, ஸ்பானிய தேசத்தரசனின் வெள்ளிச்சுரங்கமாயமைந்துள்ளது.

அமெரிக்க ஐக்கிய நாடுகளைச் சார்ந்த வாஷிங்டனிலுள்ள 'பெரியகௌண்டி' என்னும் சோப்பு ஏரி, கலக்கப்படின் நுரையுடன் விளங்கி, கரிய மயிருடையவரை நரை-

யுடையவராக்கும் வியப்பை அளிக்கின்றது. **கிழக்-காப்பிரிக்காவிலுள்ள கிளிமஞ்சரோ** எரிமலையினருகி-லமைந்த '**மகடி**' ஏரி, சோடாஉப்பு விளையும் இடமாயிருக்-கின்றது. பதினறு மைல் நீளமும் எட்டு மைல் அகலமு-முள்ள அவ்வேரியின் நீர், சூரிய வெப்பத்தால் உறைந்து, பனிக்கட்டிகள் அனைய சோடா உப்புக் கட்டிகளாய்க் காட்சி அளிக்கின்றது.

மக்களுக்கு உறையுள் அளித்து வரும் சிறப்பைப் பொலிவியாவிலுள்ள 'டோபோரோகோ' என்னுமிடத்தில் காணலாம். **பாட்டில் மரங்கள்** அங்குள்ளன. அவற்றின் பெரிய அடி மரங்களைக் குடைந்து அவற்றினுள் மக்கள் வசிக்கிறார்கள். அவ்வில்லங்களைப் பழுது பார்க்க வேண்டிய அவசியமின்று. மரங்களும் குடையப் பெறுதலால் கேடுறுதல் இல்லை.

தாய் தன் இளஞ்சேய்க்கு இன்னிசையால் இன்பம் விளைத்தல் போன்று, அமெரிக்காவில் பாடும் மணலாலும், இலங்கையில் பாடும் ஏரியாலும் மக்களுக்கு இயற்கையன்னை இன்னிசை உதவுகின்றாள்.

உயிர்களுக்கு வேண்டுவன அளித்து உலகை நடாத்தும் இறைவன், உழைப்பால் உயர்வு பெறுதலையே மக்களின் குறிக்கோளாக அமைத்திருப்பினும், தன் அளவில்லா அருளால் இயற்கையினின்றே எளிதில் உணவும் உடையும் உறையுளும் பிறவசதிகளும் பெற்று மக்கள் இன்புற்று வாழும் சாதனங்களையும் உதவி, வள்ளல்களின் கொடைத்திறன் வறிதென்னும்படி, பரந்த கொடைத்திறனுடன் திகழ இயற்கையை அமைத்துள்ளான்.

அருஞ்சொற்பொருள் :

ஈத்து - கொடுத்து, உவக்கும் - மகிழும், ஈட்டிய - தேடிய, இரவலர் - யாசகர், வண்புகழ் - மேலான புகழ், பொன்னி - காவிரி, துடைக்கின்றன - நீக்குகின்றன.

வினாக்கள் :

1. தமிழ் நாட்டு வள்ளல்கள் எத்தகைய மனப்பண்பு படைத்தவர்கள் ?

2. சடையப்பர் 'இல்லை' என்னு இயல்பு படைத்தவர் என்பதற்குச் சான்று தருக.

3. 'இயற்கை அன்னை ஈதற்சிறப்பு வாய்ந்தவள்,' என்பதை விளக்குக.

4. இயற்கை அன்னை மரங்களினின்று நீரும் உணவும் உதவுவதற்கு உதாரணம் தருக.

5. இயற்கை அன்னை ஒளி உதவும் விசித்திரத்தை விளக்குக.

6. இயற்கை அன்னை எவ்வாறு இன்னிசை உதவுகின்ருள் ?

7. 'இயற்கையின் தண்ணளி' என்பது பற்றி 10 வரிகள் எழுதுக.

5. கூட்டுறவுச் சங்கங்கள்

[டாக்டர் பா. நடராஜன் அவர்கள், M.A., D. Litt.]

நம் நாடு தொழில் வளர்ச்சியடையாத நாடு. ஆயினும், தொழில் வளம் மிக்க நாடு என்று சொல்லிக்கொள்ளும் பல நாடுகளைவிட, நம் நாட்டிற் கூட்டுறவு இயக்கம் நன்கு வளர்ச்சியடைந்திருக்கிறது.

'பராமரிப்பு ஆட்சி வந்து, மக்கள் சுய முயற்சிக்கு இடமின்றி அரசாங்கமே எல்லாவற்றையும் செய்துவிடும்பொழுது கூட்டுறவு இயக்கம் வலியிழக்கிறது' என்று ஆசிரியர் ஆஷ்பி கூறினர். இந்தப் பொதுவான தத்துவத்தை மேலும் விரிவாக விளக்குவாரானல், அவர் அதைப் பல நிபந்தனைகளுக்கும் கட்டுப்பாடுகளுக்கும் உட்படுத்துவர். அப்படியின்றி, அதையே முடிவானது என்று அவர் கருத மாட்டார் என்று நம்புகிறேன்.

இந்தியாவைப் பொறுத்த வரை, சென்ற சில ஆண்டுகளாக, மக்களின் நன்மையை நாடும் சர்க்காரின் நிகழ்ச்சிகள் விரிய விரிய, கூட்டுறவு இயக்கத்தின் வளர்ச்சி எந்த விதத்திலும் தடைபட்டதாகத் தெரியவில்லை.

வேகமான முன்னேற்றம் : இந்தியா சுதந்தரம் அடைந்தவுடன், சுதந்தர அரசியல் திட்டத்தை உருவாக்கும் தலைவர்கள், தேச பிதா மகாத்துமா காந்தியடிகளின் இலட்சியத்திற்கிணங்க, கூட்டுறவுப் பொது சாம்ராஜ்யம் அமைப்பதையே குறிக்கோளாகக் கொண்டுள்ளார்கள்.

சென்ற மூன்ருண்டுகளாக, மாகாண மத்திய அரசாங்கங்களில், காங்கிரஸ் பதவி ஏற்றதிலிருந்து கூட்டுறவு இயக்கத்தின் வளர்ச்சிக்கு வேண்டிய ஊக்கம் அளிக்கப்பட்டிருக்கிறது. இரண்டாவது மகாயுத்தத்திற்குப் பின்னர் இந்தியாவிற் கூட்டுறவு இயக்கம் எவ்வளவு வேகமாக முன்னேறி வருகிறது என்பதைக் காட்டுவதற்குச் சில புள்ளி விவரங்களை இங்குத் தருகின்றேன் :

விவசாயக் கடன் உதவிச் சங்கங்கள் : கூட்டுறவு விவசாயக் கடன் உதவிச் சங்கங்களின் எண், 1938–39-ஆம் வருடத்தில் 93,800-ஆய் இருந்தது. 1945–46-ஆம் ஆண்-

டில் 124,200-ஆய் உயர்ந்துவிட்டது ; அதாவது, சுமார் 35 சதவீதம் அதிகரித்திருக்கிறது. இதரக் கூட்டுறவு விவசாயச்-சங்கங்களின் எண், அவ்வாண்டுகளில் 11,500இலிருந்து 22,800 ஆகச் சுமார் 100 சதவீதம் அதிரிகரித்திருக்கிறது. கூட்டுறவு விவசாயக் கடனுதவி, இதரக் கூட்டுறவு விவசா-யச் சங்கங்கள் இவைகள் இரண்டும் சேர்ந்து, 105,300இலி-ருந்து 147,000 ஆகச் சுமார் 40 சதவீதம் உயர்ந்திருக்கிறது.

இந்தக் கூட்டுறவுச் சங்கங்களின் 'வழங்கப்பட்ட மூல-தனம்' ரூ. 1278 லட்சத்திலிருந்து ரூ. 1645 லட்சமாகவும், டிபாசிட்டுத்தொகை ரூ. 277 லட்சத்திலிருந்து ரூ. 543 லட்ச-மாகவும், 'ஆட்சிக்கு உட்பட்ட மூலதனம்' ரூ. 3162 லட்சத்-திலிருந்து ரூ. 3301 லட்சமாகவும் உயர்ந்திருக்கின்றன. 1945–46ல் இந்தியாவிலிருந்த கூட்டுறவுச் சங்கங்கள் 172,000 ; அவற்றின் அங்கத்தினர்கள் 916 லட்சம் ; அதில் 'ஆட்சிக்குட்பட்ட மூலதனம்' ரூ. 164 கோடி ; அவை அந்த ஆண்டிலே கடனுகக் கொடுத்த தொகை ரூ. 541½ கோடி. பாகிஸ்தான் பிரிவினைக்குப் பின்னர் இந்தியாவில் மட்டும் 894 லட்சம் அங்கத்தினர்களைக் கொண்ட 135,708 கூட்டுற-வுச் சங்கங்கள் உள்ளன ; அவற்றின் 'ஆட்சிக்குட்பட்ட மூலதனம்' ரூ. 166 கோடி.

சென்னை மாகாணத்தில் கிராமாந்தரச் சங்கங்-கள் : சென்னை மாகாணத்தில் 1938–39ல் இருந்த 21 கிராமக் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள், 1946–47க்குள் 1132 ஆக வளர்ந்துவிட்டன ; இந்த ஆண்டுகளில் அங்கத்-தினர் தொகை 2888லிருந்து 2,49000ஆகவும், 'வழங்கப்-பட்ட மூலதனம்' ரூ. 17000 லிருந்து ரூ. 53,29,000 ஆக-வும் உயர்ந்திருக்கின்றன ; விற்பனை ரூ. 3,51,000லிருந்து ரூ. 480,00,000 ஆகச் சுமார் 137 மடங்கு அதிகரிக்கின்றது. உபயோகிப்பவர் கூட்டுறவுச் சங்கங்கள், கூட்டுறவு மார்-கெட்டிங் சங்கங்கள் ஆகிய இரண்டு வகைப்பட்ட சங்கங்-களுங்கூட இத்தகைய விரிவான வளர்ச்சியை அடைந்-துள்ளன.

சர்க்கார் உதவி : அரசாங்கம் பல வகைகளில் இவற்-றிற்கு உதவியுள்ளது. எல்லாத் துறைகளிலும் கூட்டுறவு

நிலையங்களுக்கு முதலிடம் கொடுத்து உற்சாகம் அளிக்கப்பட்டுள்ளது. தானியச் சேகரிப்பானது கூட்டுறவுச் சங்கங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் கூட்டுறவுச் சங்கங்களின் கணக்குகளைத் தணிக்கை செய்து, புதிய கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்க உதவி செய்கிறார்கள். மது விலக்குச் செய்துகொண்டு வரப்பட்டுள்ள சென்னை மாகாணத்தில் பொதுநலப் பணிகள் கூட்டுறவுத்துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இவை தவிரக் கூட்டுறவு நிலையங்கள் அரசாங்கத்தினிடமிருந்து பல விதமான நன்மைகளையும் சலுகைகளையும் அடைந்திருக்கின்றன.

தேவையில் ஒரு பகுதி மட்டுமே இத்தனை சலுகைகளையும் உதவிகளையும் பெற்றிருந்தும், இந்தக் கூட்டுறவு இயக்கம் விவசாயக் கடன் சுமையைக் குறைப்பதில் பெரிய அளவில் வெற்றி பெறவில்லை என்பதை ஒப்புக்கொள்ளுகிறேன். விவசாயக் கடன்சுமை எளிதில் தீர்க்க முடியாத பெரியதொரு பிரச்சினையேயாகும். ஓர் உதாரணம் கூறுகிறேன் : சென்னை மாகாணத்தில் ஒரு வருடத்தில் விவசாயச் செலவுக்கு வேண்டிய தொகை ரூ. 200 கோடியாகும். ஆனால், சென்னை மாகாணத்திலுள்ள கூட்டுறவு விவசாயக் கடன் உதவிச்சங்கங்கள் கொடுக்கும் தொகை ரூ. 6 கோடிதான் ; அதாவது மொத்தத் தேவையில் 3 சதவீதமேயாகும். விவசாயத்தொழிலை நடத்துவதற்கு இந்தியா முழுமைக்கும் ஆண்டொன்றுக்குச் சுமார் ரூ. 1,520 கோடி வேண்டியிருக்கிறது. ஆனால், கூட்டுறவு இயக்கம் கடனாகக் கொடுக்கக்கூடியதெல்லாம் சுமார் ரூ. 40 கோடிதான். இது மொத்தத் தொகையில் 2·6 சதவீதமேயாகும். கூட்டுறவு இயக்கம் தொடங்கப்பட்டு 45 வருடங்களாகியும் இந்நிலையிலேதானிருக்கிறது.

‘ரெய்ப்பீஸன்’ சங்கங்கள் : ஆங்கிலேய அதிகாரிகளில் திறமை வாய்ந்தவரும், சிறந்தவருமான சர்பிரடரிக்கு நிக்கல்சன் சென்ற நூற்றாண்டின் இறுதியில் ‘ரெய்ப்பீஸன் கூட்டுறவுச் சங்கங்களை நிறுவுங்கள் ; உங்கள் குறை தீரும்,’ எனக் கூறிச்சென்றார் ; பொருளாதாரத் துயரங்கள் யாவும் அவற்றால் ஒழியும் என்று எண்ணினார். நாம் ரெய்ப்பீஸன்

கூட்டுறவுச் சங்கங்களை நிறுவினோம். காலமும் அரை நூற்றுண்டு கழிந்துவிட்டது. ஆனால், நாம் கண்ட முடிவு, 'ரெய்ப்பீஸன் கூட்டுறவுச் சங்கங்களைக் காண்பது மட்டும் போதாது,' என்பதுதான்.

'ஒரே துறையில் வேலை செய்யும் சங்கம், திறமையாகவும் இலாபகரமாகவும் நடைபெறலாம்; ஆனால், அது மக்களிடையே கூட்டுறவு சமுதாய உணர்ச்சிகளை ஊட்ட முடியாது,' என மிக அழகாகக் கூறினர் ஆசிரியர் ஆஷ்பி. இஃது இந்தியா அறிந்துகொண்ட உண்மையே. பிற நாடுகளைக்காட்டிலும் இந்தியாவில் வெவ்வேறு கூட்டுறவுச் சங்கங்கள் வெவ்வேறு துறைகளில் ஈடுபட்டு விருத்தி அடைந்திருக்கின்றன. விவசாயக் கடனுக்கென்றும், வீடு கட்டுவதற்கென்றும் விளைபொருள்கள் விற்பனைக்கென்றும், வாழ்க்கைக்கு அவசியமான பொருள்கள் வாங்குவதற்கென்றும் இங்குத் தனித்தனி சங்கங்கள் நிறுவப்பட்டும் வளர்ந்தும் வந்திருக்கின்றன. ஒவ்வொன்றிற்கும், ஒவ்வொரு நோக்கம். கடனுதவிச் சங்கங்களின் நோக்கம், குறைந்த வட்டி; வீடு கட்டும் சங்கங்களின் நோக்கம், குறைந்த தொகைத் தவணை; விற்பனைச் சங்கங்களின் நோக்கம் அங்கத்தினர்களுக்கு அதிக லாபம்; கூட்டுறவுப் பண்டகசாலைகளின் நோக்கம், அதிக டிவிடெண்டு. இப்படியாக, இதுகாறும் திறமையிலும் வியாபார முறைகளிலும் அதிகக் கவனம் செலுத்தினர்களே தவிரக் கூட்டுறவு உணர்ச்சி வளர்வதற்கான ஏற்பாடுகள் செய்வதில் மக்கள் போதிய கவனம் செலுத்தவில்லை.

'பலதுறை'ச் சங்கங்கள் தேவை: இதை அறிந்துதான் காங்கிரஸ் அரசாங்கம் கூட்டுறவு இயக்கத்தில் ஒரு புதிய நோக்கத்தை ஏற்றுக்கொண்டு பலதுறைக் கூட்டுறவுச் சங்கங்களை (Multi-purpose) நிறுவ ஏற்பாடு செய்திருக்கிறது. ஒரு கிராமத்துக்கோ, ஒரு கிராமத் தொகுதிக்கோ, பல முறைகளில் உதவும் ஒரு பலதுறைக் கூட்டுறவுச் சங்கம் நிறுவச் சென்னை அரசாங்கம் கருதி வருகிறது. இந்தச் சங்கம் உற்பத்தியாளருக்கு வேண்டிய பொருள்களை வாங்கிக்கொடுக்கும்; கடன் வசதி அளிக்கும்; உற்பத்தியான

பொருள்களை விற்பனை செய்து வரும்; மலிவான விலையில் தேவையான பண்டங்களை வாங்கி உதவும்; மக்கள் நலனைப் பேணும் சங்கமாகவும் விளங்கும். கடலை உடைத்தல், நெல் அரைத்தல், கரும்பாட்டுதல், பனைவெல்லம் செய்தல் போன்ற விவசாயப் பொருள்களைப் பக்குவப்படுத்தும் வேலையில் இச்சங்கங்கள் ஈடுபடும்: உழவுத் தொழிலில் கால்நடை வளர்த்தலிலிருந்து விவசாயக் கச்சாப் பொருள்களைப் பக்குவப்படுத்தும் துணைத்தொழில்களை அமைத்தல், வேலையில்லாக் காலத்தில் வேலை கொடுக்கக்கூடிய குடிசைத் தொழில்களை நிறுவுதல் வரை, எல்லா விதமான தொழில்களிலும் உதவி புரியும். இந்தச்சங்கம் கிராமப் பொருளாதார அமைப்பின் அச்சாணி போல அமையும்.

இவ்வாறு கிராமத்தின் நிகழ்ச்சிகள் எல்லாவற்றிலும் ஈடுபட்டு உதவும் ஒரு மத்திய பலதுறைக் கூட்டுறவுச் சங்கம் அமைப்பது மக்களிடையே கூட்டுறவு உணர்ச்சி பெருக ஏதுவாய் இருக்கும். காலப்போக்கில் ஏற்படும் மாறுதல்களுக்கிணங்க, ரெய்ப்பீஸன் சங்கங்கள் மாறி இக்காலத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பல துறைக் கூட்டுறவுச்சங்கங்கள் அமைத்தல் அவசியம் ஆகிறது. பங்குப் பணத்தைச் செலுத்துவதற்கான சட்டதிட்டங்களில் காலத்திற்கேற்பச் சில மாறுதல்கள் செய்வதால், சமுதாயக் கூட்டுறவு உணர்ச்சி விரைவில் வளர்ச்சியடைந்து வலுப்பெறும்.

அடிப்படையை விரிவாக்க வேண்டும்: சிறிய பங்குத் தொகையைக்கூட ஒரே தவணையில் செலுத்த அளித்த வசதியானது இதுவரையிலும் போதுமானதாயிருந்தது. இச்சமயமோ, கூட்டுறவு நிலையங்களில் தொழிலாளர்களுக்கும் தகுதியான மதிப்பு அளிக்க வேண்டுவது அவசியமாகிறது. தொழிலாளர் தங்கள் பங்குத் தொகைக்குப் பதில், உழைப்பினுல் ஈடு செய்ய வசதியளிக்க வேண்டுமென்பது எனது கருத்து. இதைச் செய்வதனுல் கூட்டுறவு இயக்கம் வலுப்பெற்று வளர்ச்சியுறும்; வளர்ந்தால், அது உண்மையில் கூட்டுறவுப் பொதுச் சமுதாயத்தை நிலைபெறச் செய்வதற்குச் சிறியதோர் அடிப்படையாய் அமையும்.

அருஞ்சொற்பொருள் :

பராமரிப்பு - காப்பாற்றுதல், தத்துவத்தை - உண்மையை, நிபந்தனை-கட்டளை, இலட்சியம் - நோக்கம், குறிக்கோள் - கொள்கை, தணிக்கை செய்து - சரி பார்த்து, சலுகை - ஆதரவு, பேணும் - போற்றும், டிவிடெண்டு - இலாபப் பிரிவு, கச்சாப் பொருள் - பக்குவப்படுத்தாத பொருள்.

வினாக்கள் :

1. கூட்டுறவு இயக்கத்தைப் பற்றி ஆஷ்பி என்பவரது கொள்கை யாது ?

2. இந்தியாவில் கூட்டுறவு இயக்கம் வேகமாக முன்னேற்றமடைந்துள்ளமைக்குச் சான்றுகள் தருக.

3. கூட்டுறவு இயக்கத்திற்கு நமது அரசாங்கம் செய்துள்ள உதவிகள் யாவை ?

4. கூட்டுறவுச் சங்கம் விவசாயக் கடன் சுமையைக் குறைப்பதில் வெற்றி பெருமைக்குக் காரணம் கூறுக.

5. இந்தியாவில் விருத்தியடைந்துள்ள பல்வேறு கூட்டுறவுச் சங்கங்களையும் அவற்றின் நோக்கங்களையும் வரைக.

6. 'பல துறைக் கூட்டுறவுச் சங்கமும் அதன் சேவையும்' என்பது பற்றிப் பத்து வரிகள் எழுதுக.

6. சீனிவாச இராமானுசனர்

[S. பகவதீஸ்வர ஐயர் அவர்கள், M.Sc.]

கும்பகோணத்தில் ஒரு பாடசாலையில் இரண்டாவது பாரத்தில் கணக்குப் பாடம் நடந்துகொண்டிருந்தது. கணித ஆசிரியர், 'ஓர் எண்ணை அதே எண்ணால் வகுத்தால், ஒன்று என்பது விடையாக வரும்,' என்று கற்பித்தார். அப்பொழுது மாணவர் ஒருவர் எழுந்து நின்று பணிவான குரலில், 'சுன்னத்தைச் சுன்னத்தால் வகுத்தால், விடை ஒன்று-தானே ?' என்று கேட்டார். ஆசிரியர் விடைகூற முடியாமல் திகைத்து நின்றார். சுன்னத்தைச் சுன்னத்தால் வகுத்தால் விடை என்ன என்பதைக் கணிதநூற்புலவர்கள் இன்று வரையிலும் கண்டறியவில்லை என்றால், அன்று ஆசிரியர் திகைத்து நின்றதில் ஆச்சரியமில்லை அல்லவா ? ஆனால், இத்தகைய வினாவைவிடுத்த மாணவரைப்பற்றி நாம் அறிந்து கொள்ளுதல் வேண்டும் :

பண்டுதொட்டு வீரத்தின் விளைநிலமாயும் அறிவின் உறைவிடமாயும் விளங்குவது தமிழ்நாடு. தமிழ்நாட்டின் ஒரு பகுதியான கோவை மாவட்டத்தைச் சேர்ந்த ஈரோடில் **சீனிவாச ஐயங்கார்** என்றொருவர் வாழ்ந்து வந்தார். அவர் மிகவும் ஏழை ; கும்பகோணத்தில் ஒரு துணிக்கடையில் கணக்கராய் வேலை பார்த்து வந்தார். அவர் மனைவியாரும் ஏழைக் குடும்பத்தைச் சார்ந்தவரே. அவர்கள் பிள்ளைப்-பேறு இல்லாமையால் பெரிதும் வருந்தினார்கள் ; நாமக்கல் தெய்வமாகிய **நாமகிரி அம்மனைத்** துதித்து, வழிபாடு இயற்றி, அவள் அருளை வேண்டி வந்தார்கள். அந்த இறை-வியின் அருளால், அவர்களுக்குக் கி. பி. 1887-ஆம் ஆண்டு, டிசம்பர்த் திங்கள், 22-ஆம் நாள் குழந்தை ஒன்று பிறந்தது. அக்குழந்தைதான் கணித ஆசிரியரை மட்டுமன்றி, உலகி-லுள்ள கணித மேதைகள் பலரையும் தாம் கண்டறிந்த புது-மைத் தத்துவங்களால் திகைப்புறச் செய்த **சீனிவாச இராமானுசர்.**

பெற்றோர்கள் இராமானுசரை ஐந்தாவது வயதில் ஒரு திண்ணைப் பள்ளியில் படிக்க வைத்தார்கள். பின்பு, அவர்

கும்பகோணம் அரசாங்கப் பள்ளியில் சேர்ந்து கற்று வரலானர் ; தமது ஒன்பதாவது வயதில் ஆரம்பப் பாடசாலைத் தேர்வில் தஞ்சை மாவட்டத்தில் முதன்மையாகத் தேறி, உபகாரச் சம்பளமும் கிடைக்கப்பெற்ருர். அதன் உதவியால் அவர் உயர்நிலைப் பள்ளியில் சேர்ந்து கற்கத் தொடங்கினர். அப்பொழுதே அவர் உள்ளத்தில் சிந்தனை அலைகள் தோன்றலாயின. அவர் எப்பொழுதும் வானவெளியைப் பற்றியும், உலக அமைப்பைப் பற்றியும் இளமாணவர்களுக்கு எட்டாத விண் மீன்களின் இருக்கை பற்றியும் பல பொருள்களைப் பற்றியும் சிந்தித்துக்கொண்டே இருப்பார். அவர் சிந்தனை உள்ளத்தில் அவ்வப்பொழுது பல உண்மைகள் தோன்றலாயின.

இராமானுசர் அங்கு இரண்டாவது பாரத்தில் படித்துக்கொண்டிருக்கும்போதுதான் வினவொன்றின் மூலம் ஆசிரியரைத் திகைக்க வைத்தார் என்ருேம். அப்போது அவர் பிற்காலத்தில் ஒரு கணித மேதையாய் விளங்குதல் கூடும் என்பது பலருக்குத் தெரியவந்தது. அவர் இல்லத்தின் அருகே பி. ஏ. வகுப்பில் படிக்கும் மாணவன் ஒருவன் வசித்து வந்தான். ஒருநாள் இராமானுசர் அவனிடமிருந்து கணிதநூல் ஒன்றைப் பெற்று வந்து '**மூன்றுபுரொக்ரஷன்ஸ்** (Three progressions) '**ஹையர் டிரிக்னுமெட்ரி**' (Higher Trigonometry) முதலியவற்றைத் தாமாகவே நன்கு பயின்ருர். அதைக்கண்டு அதிசயித்த அம்மாணவன் தனக்கு விளங்காத பகுதிகளை இராமனுசரிடம் கேட்டு அறியலானுன். எனவே, அவர் நுண்ணறிவிற்கு வேறு சான்றும் வேண்டுமோ ?

1903ல் இராமானுசர் 6-ஆம் பாரம் படித்து வந்தார். அப்போது அவருக்கு **எம். ஏ.** வகுப்புக்குரிய '**கார்ஸ் ஸினப்ஸிஸ் ஆப் பியூர் மேதமாட்டிக்ஸ்** (Kar's Synopsis of Pure Mathematics)' என்ற கணித நூலைப் படிக்கும் வாய்ப்பு ஏற்பட்டது. அவர் அதிலுள்ள வினுக்களுக்குத் தாமே விடை கண்டதோடு சுமார் 6000 தேற்றங்களின் நுட்பத்தையும் உணர்ந்துகொண்டாராம். அவரது அரிய ஆற்றலைக் கண்ட நண்பர்கள், 'இவ்வுண்மைகளை எவ்விதம்

கண்டறிந்தீர்கள் ?' என்று கேட்டால், 'நாமகிரி தேவியின் அருளால் கனவில் கண்டறிந்தேன்,' என்று விடை இருப்பாராம். அந்த ஆண்டில் இராமானுசர் 'மெற்றிக்குலேஷன்' பரீட்சையில் கணிதத்தில் நல்ல மதிப்போடு தேறி, '**சுப்பிரமணியம் பரிசு**' என்ற பரிசும் கிடைக்கப்பெற்ருர்.

பின்பு, அவர் கும்பகோணக் கல்லூரியில் சேர்ந்து படித்து வரலானுர்; கணித பாடத்தில் மிகுதியும் கருத்தைச் செலுத்தியமையால், மற்றப் பாடங்களைக் கவனியாதிருந்தார்; ஆதலின், முதல் வகுப்பிலேயே தோற்ருர்; பின் பல முறை முயன்றும் அத்தேர்வில் வெற்றி பெற முடியாமையால், கல்லூரிப் படிப்புக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டுக் கணித ஆராய்ச்சிலேயே காலங்கழித்து வரலானுர். அப்போது அவர் கணிதத் துறையில் அதுவரையில் எவரும் கண்டறிந்திராத புத்தம்புதிய உண்மைகள் பலவற்றைக் கண்டறிந்தார். என்ருலும், அன்று உலகம் அவரை அறிந்துகொள்ளவில்லை. புலவர்க்குரிய வறுமை அவரை வாட்டி வந்தது.

பெற்ருேர்கள் 1907ல் அவருக்குத் திருமணம் செய்து வைத்தார்கள். வறுமை மேலும் அதிகரித்தது. அக்காலத்தில் அவர் வேலைக்கு அலைந்து பட்ட அல்லலுக்கு அளவில்லை. ஒரு சமயம் அவர் கணிதக் குறிப்புப் புத்தகத்தைக் கண்டு மகிழ்ந்த இந்தியக் கணித ஆராய்ச்சித்துறை அலுவலக அமைப்பாளர், அவருக்குச் சென்னை மாகாண வரவு செலவுக் கணக்கெடுப்பு அலுவலகத்தில் கணக்கர் வேலை கொடுத்தார். பின்பு அவர் சென்னைக் 'கடற்கரைப் போக்குவரத்து' அலுவலகத்தில் முப்பது ரூபாய்ச் சம்பளத்தில் அமர்ந்தார். என்ருலும், வறுமைத் துன்பத்திற்கு மட்டும் குறைவில்லை. தமிழகம் அவரது தனிப்பெருமையை அறிந்துகொள்ளவும் இல்லை.

1911ல் இராமானுசனுர் இந்தியக் கணித ஆராய்ச்சிக் கதிரில் '**பெர்னுெலி எண்களின் சில நுட்பங்கள்**' என்ருெரு கட்டுரை எழுதியிருந்தார்; பின்னும் சில கட்டுரைகளைத் தொடர்ந்து எழுதினுர். அவற்றைக் கண்ணுற்ற கணித அறிஞர் பலர் இராமானுசனுரைக்

கவனிக்கலாயினர். அவர்களில் நெல்லூர்க் கலெக்டராய் இருந்த ஆர். இராமசந்திர ராவும், பி வி. சேஷு ஐயரும் முக்கியமானவர்கள். இவர்களது தொடர்பே அவரது புகழ் வெளியுலகிலும் பரவுவதற்குக் காரணமாய் இருந்தது.

ஒருசமயம் இங்கிலாந்திலுள்ள ஜி. எச். ஹார்டி என்னும் கணித நூலறிஞர், தமக்கு ஏற்பட்டிருந்த சில ஐயங்களை ஒரு நூல் வாயிலாக வெளியிட்டிருந்தார். அவற்றைக் கண்ணுற்ற இராமானுசனுருக்கு அவை மிகவும் எளியனவாய்த் தோன்றின. அவர் அவற்றிற்கு விடை எழுதினர்; பி. வி. சேஷு ஐயர் அவர்களின் துணையைக்கொண்டு ஹார்டி துரைக்கும் பதில் எழுதினர்; அதனோடு புதிய சில கணக்குகளையும் எழுதியிருந்தார். அவற்றைக் கண்ட ஹார்டி துரை, வியப்படைந்தார்; இராமானுசனுரைப் புகழ்ந்து ஒரு பாராட்டுக் கடிதமும் எழுதினர். அப்பொழுதுதான் இராமானுசனுரின் புகழ் எங்கும் பரந்தது. சென்னைப் பல்கலைக் கழகமும் அவர் பெருமையை உணர்ந்து அவருக்கு உபகாரச் சம்பளமாக ரூபாய் எழுபத்தைந்து கொடுத்து உதவிற்று.

ஹார்டி துரை இராமானுசனுரை எவ்விதமேனும் இங்கிலாந்திற்கு வரவழைத்து அவர் மேதையைப் பயன்படுத்த வேண்டும் என்று திட்டமிட்டார். அவருடைய பெரு முயற்சியால் இராமானுசனுர் இங்கிலாந்து செல்வதற்கு ஏற்பாடானது. சென்னைப் பல்கலைக் கழகம் அவருக்கு ஆண்டொன்றுக்கு 250 பவுன் உபகாரச் சம்பளம் கொடுப்பதோடு இங்கிலாந்து செல்வதற்குரிய செலவையும் கொடுத்துதவ முன்வந்தது. இராமானுசனுர் பல்கலைக் கழகம் தமக்குக் கொடுத்த சம்பளத்தில் மாதம் அறுபது ரூபாயை வறுமையால் வாடும் தம் குடும்பத்தினருக்குக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்துவிட்டு, 1914-ஆம் ஆண்டு, மார்ச்சு மாதம், 17-ஆம் நாள் இங்கிலாந்திற்குப் பயணமானுர்.

இராமானுசனுரை ஹார்டி துரை கேம்பிரிட்ஜ் நகரிலுள்ள டிரினிட்டிக் கல்லூரியில் சேர்த்துக்கொண்டார். லிட்டில் உட் என்னும் மற்றோர் அறிஞர் துணையும் அவருக்குக் கிடைத்தது. கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தினரும்

அவருக்கு அறுபது பவுன் உபகாரச் சம்பளம் உதவினர். அவரது ஆராய்ச்சி வன்மையைப் போற்றிப் புகழ்ந்த மேஞட்டினர் பலராவர். ஹார்டி துரை 1915ல் சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு எழுதிய கடிதம் ஒன்றில், 'இப்போது அவர் மிகப் பெரிய இந்தியக் கணித மேதை என்பதில் ஐயமில்லை. அவர் நுண்மதியைப்பற்றி யாருக்கும் ஐயமிருக்க முடியாது. நானறிந்த வரை அவரே மிகப் பெரிய கணித ஆராய்ச்சியாளர்,' என்று குறிப்பிட்டிருந்தார். நியூமன் என்னும் மற்றோர் அறிஞர், 'அவர் ஒரே முயற்சியில் பிறர் உதவி இல்லாது ஐரோப்பாவில் 50 வருடங்களில் கண்டறிந்த நுட்பங்களைக் கண்டறிந்தார்,' என்று பாராட்டினுர்.

1918ல் அவரை அரசாங்க ஆராய்ச்சிக் குழுவினருள் ஓர் உறுப்பினராகத் தேர்ந்தெடுத்தார்கள். முதலில் இப்பதவி பெற்ற இந்தியர் அவரே. பின்னர், அவர் டிரினிட்டிக் கல்லூரிக் குழுவினருள் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அக்குழுவினர் அவருக்கு ஆண்டொன்றுக்கு 250 பவுன் வீதம் உதவ முன் வந்தனர். இவ்வாறு இராமானுசஞரின் பேரும் புகழும் உயரவே, சென்னைப் பல்கலைக் கழகம் மேலும் உதவிகள் பல செய்ய முற்பட்டது. என்றுலும், என்ன பயன்? இராமானுசஞர் இளமையில் பட்ட வறுமைத் துன்பத்தாலோ, பிற காரணங்களாலோ, காச நோயால் துன்புறலானுர்.

இங்கிலாந்தில் அவருக்கு நல்ல முறையில் மருத்துவம் செய்யப்பட்டது. ஆனுலும், நோய் தீர்ந்தபாடில்லை. ஆதலின், அவர் இந்தியாவுக்குப் புறப்பட வேண்டிய நிலை ஏற்பட்டது. 1919ல் சென்னையை அடைந்து, சேத்துப்பட்டு என்னும் இடத்திலுள்ள ஒரு மாளிகையில் தங்கினுர். செல்வர் பலர் அவருக்குப் பலவாறு உதவி புரிந்தனர். நோய்வாய்ப்பட்டிருந்த அந்நிலையிலும் அவர் உள்ளம் கணித ஆராய்ச்சியிலேயே ஈடுபட்டிருந்தது. அப்பொழுதும் அவர் கணித உண்மைகள் பலவற்றைக் கண்டறிந்தவராகவே இருந்தார். 1920-ஆம் ஆண்டு, ஜனவரியில் ஹார்டி துரைக்குத் தாம் கண்டறிந்த சில உண்மைகளைப் படுக்கையிலிருந்துகொண்டே எழுதி அனுப்பினுர் என்றுல், அவர் கணிதத்தின்-

பால் கொண்டிருந்த ஆர்வத்துக்கு அளவுமுண்டோ ? இங்கிலாந்தில் நோய்வாய்ப்பட்டுப் படுக்கையில் இருந்த போதும் அவர் உள்ளம் கணித ஆராய்ச்சியில் ஈடுபட்டே இளைப்பாறிக்கொண்டிருந்தது என்று கூறுகிறார் ஹார்டி துரை.

இந்திய நாட்டின் இளஞ்சூரியனாய் விளங்கிய இராமானுசனார் இளம்பருவத்திலேயே இவ்வுலக வாழ்வை நீத்தது இந்திய நாட்டிற்கு ஈடு செய்ய முடியாத பெருநஷ்டமாகும் ! அவர் 1920-ஆம் ஆண்டு, ஏப்பிரல் மாதம், 26-ஆம் நாள் விண்ணுலகத்திற்கு விருந்தினரானார். அவர் ஊனுடல் மறைந்தது; ஆனால், புகழுடல் என்றும் நின்று நிலவும் என்பது உறுதி !

அருஞ்சொற்பொருள் :

அல்லல் - துன்பம், ஐயம் - சந்தேகம்.

வினாக்கள் :

1. இராமானுசனார் ஆசிரியரை எவ்வாறு திகைப்புறச் செய்தார் ?
2. இராமானுசனாரின் பெற்றோர்களைப் பற்றிச் சிறு குறிப்பு வரைக.
3. இராமானுசனார் இளமையிலேயே சிந்தனை உள்ளம் படைத்தவராய் இருந்தார் என்பதைத் தெளிவுபடுத்துக.
4. அவர் நுண்ணறிவு படைத்தவர் என்பதற்குச் சான்று தருக.
5. இராமானுசனார் தாம் கணித உண்மைகள் பலவற்றைக் கண்டறிந்தமைக்குக் கூறி வந்த காரணம் என்ன ?
6. அவர் புகழ் பரவ முதற்காரணராய் இருந்தவர் யாவர் ?
7. அவர் இங்கிலாந்து சென்றமையைப்பற்றி எழுதுக.
8. அவர் புகழ் எப்பொழுது எங்கும் பரந்தது ?
9. மேனாட்டினர் அவர் ஆராய்ச்சி வன்மையை எவ்வாறு பாராட்டியுள்ளனர் ?
10. இங்கிலாந்தில் அவர் பெற்ற பதவிகள் யாவை ?

7. உணவும் வாழ்வும்

[டாக்டர் ராஜம்மாள் தேவதாஸ் அவர்கள்,
M.Sc., M.A., Ph.D., (DHID State)]

இயற்கை அன்னையின் எழிற்செல்வத்தாலும், பண்டைப் பண்பாட்டாலும், காந்தி மகான் கையாண்ட அகிம்ஸைக் கொள்கையாலும் மற்ற நாடுகள் இன்று நமது நாட்டை மிகப்பெரிய நாடாகவும், ஆசியாக்கண்டத்து அரணாகவும் மதித்துப் போற்றும் இத்தறுவாயில், நாம் மாத்திரம் உணவுப் பற்றுக்குறையால் உள்ளமும் உடலும் நைந்து வாடி, வாழ்க்கை நலங்களைப் பறிகொடுப்பது மிகவும் பரிதபிக்கக்கூடிய நிலைமையாகும். எல்லாச் செல்வங்களுக்கும் இருப்பிடமான நமது தாய் நாடு, தன் மக்களுக்குப் போதிய உணவை உற்பத்தி செய்து தர முடியாமல், பிற நாடுகளிலிருந்து அதிக விலை கொடுத்துக் கோடிக்கணக்கான மூட்டைத் தானியங்களை இறக்குமதி செய்கின்றது என்பது நம்ப முடியாத உண்மையாகும். அமெரிக்கா முதலிய சில அயல் நாடுகளிலே மக்கள் அளவு மீறிய உணவு உண்பதால் உண்டாகும் இருதய மூளை நோய்களைப் போக்க ஆராய்ச்சி செய்து வரும் வேளையில், நமது நாட்டில் பசிப்பிணியால் வாழ்வைத் துறக்கும் பல கோடி மக்களின் துன்பத்தைப் போக்கும் வழிகளைக் கண்டோமில்லை. அயல் நாடுகளில் மக்கள் அதிகமுண்ட மயக்க வெறியால் குற்றங்கள் செய்து தண்டிக்கப்படுகின்றார்கள். நமது நாட்டிலோ, பத்தையும் பறக்க வைக்கும் பசியின் கொடுமையால் மக்கள் பல பாவத்தொழில்களைச் செய்கின்றார்கள். என்ன கொடுமை ! உணவின் உன்னதத் தொழில்களை உணர்ந்துள்ள மேலை நாட்டினர், அதனை உற்பத்தியாக்கும் விவசாயிகளைப் போற்றி உற்சாகப்படுத்தி, அவர்களுடைய கல்வியறிவையும் உயர்த்துகின்றனர். ‘உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை’ செய்ய-வேண்டிய நாமோ, வயலில் வருந்தியுழைக்கும் விவசாயிக்கு அவனது உழைப்பின் பயனை மறுப்பதுமன்றி, அவனையும் பசியால் மடிய விடுகின்றோம்.

இந்நிலைமைகளை மாற்றுவது எங்ஙனம்? இன்று நாட்டில் நிலவும் உணவுக் குறையை ஒழிக்க, நமது அரசாங்கம் கையாளும் பல முயற்சிகள் கைகூட, நாம் நமது உணவு உற்பத்தியைப் பலவாற்ருனும் பெருக்க வேண்டும். கிடைக்கும் உணவைச் சிறந்த முறையில் பங்கீடு செய்து, தகுந்த வழியில் சமைத்து, விரயத்தை விடுத்துப் பெரிய பலனைப் பெற வேண்டும். இப்படிப் பல துறைகளிலும் உணவு நிலையை உயர்த்த முனைபவர், உணவுச் சத்தைப் (Nutrition) பற்றிய சில உண்மைகளை ஆராய்ந்தறிய வேண்டும்.

'உணவென்பது யாது? அதன் தொழில்களென்ன? நாம் எவ்வளவு உண்ண வேண்டும்? நாம் உண்ணும் அளவு, நமது தேவைகளைப் பூர்த்தி செய்கின்றதா? நமது உணவின் முக்கியக் குறைகள் யாவை? அவற்றைத் தீர்ப்பது எப்படி? நாம் ஏன் உண்ண வேண்டும்?' என்ற சில கேள்விகளுக்கு விடைகள் காண வேண்டும்.

நாம் ஏன் உண்ணவேண்டும்? வாழ உண்ணுகின்ருேமா, அல்லது உண்ண வாழ்கின்ருேமா? 'இந்தப்பாழ் வயிற்றுக்-காகத்தானே இத்தனை பாடு!' என்ற வார்த்தைகள் அடிக்கடி நம் காதுகளில் விழுகின்றன. ஓர் அமெரிக்க உணவியல் அறிஞரும், 'உலகத்தின் போராட்டங்களில் பாதியாவது உணவால் உண்டாவது,' என்று கூறினர்.

வாழ்க்கைக்கு உயிரளிக்கும் உணவு அற்ற போது, 'வாழ்க்கையே உண்பதற்குத்தான்; நாம் உண்பதற்காகவே வாழ்கின்ருேம்,' என்ற மனப்போக்கு உண்டாகிவிடுகிறது. அதனல், சண்டை சச்சரவுகளும் கொலைகளுங்கூட ஏற்படு கின்றன. ஆனல், போதிய உணவு கிடைத்து உடல் திருத்தி-யுறும் போது, 'உணவு முக்கியமானதன்று; வாழ்க்கைதான் முக்கியம். நாம் வாழ்வதற்குத்தான் உண்கின்ருேம்,' என்னும் உயர்ந்த உண்மை உதிக்கின்றது.

தேவையான உணவு கிடைக்க வழியற்றிருக்கும் இக்-காலத்தில், தமிழ் நாட்டில், 'செவிக்குண வில்லாத போழ்து சிறிது வயிற்றுக்கு மீயப்படும்,' என்ற குறளின் பொருள் சற்றுத் தலை கீழாகத் தோன்றுகிறது. வயிற்றைப் பார்த்த

பின்புதான், மனத்தைத் திருத்த முடியும். இவ்வுண்மையை உணர்ந்துதான், புரட்சிக் கவிஞர் பாரதியார் தமது புதிய ஆத்தி சூடியில் ' உடலினை உறுதி செய்', 'ஊண்மிக விரும்பு', ' மூப்பினுக் கிடங்கொடேல்,' என்றார் போலும் !

வாழ்க்கையின் முக்கியத் தேவைகள் உணவும் உடையும் ஆகும். ஆரோக்கிய வாழ்விற்கு அடிப்படையானது சத்துணவு. உணவு வயிற்றுக்கு மாத்திரமன்றி, அது நிலவும் உள்ளத்திற்கும் உடலுக்கும் உயிரை அளித்து, அவற்றை உறுதியாகப் பிணைத்து, வாழ்க்கையை வனப்புற வைக்கிறது. ஆண்மையும் வீரமும் வளர்ந்து, அறிவு சுடர் விட்டு இன்பம் எங்கும் நிறைந்து தங்க உதவுவது உணவு.

மனிதனின் வெளிச் சூழ்நிலையைவிட அதிக முக்கிய-மான—சூட்சுமமான—உடலின் உள் சூழ்நிலையை ஏற்றவாறு இயைய வைத்து, அவன் செய்கைகளை இயக்குவது உணவின் முக்கியத் தொழில்களில் ஒன்று. நம் சிந்தனைகள், செய்கை-கள், விருப்பங்கள் யாவும் தேகத்தின் பல உயிரணுக்களின் மின்சாரத் தாக்குதல்களாலும், கவர்ச்சிகளாலும் பிறக்-கின்றன என்பது இன்றைய விஞ்ஞானிகள் கண்டறிந்த முடிபு. இத்தகைய மின்சார மோதுதல்களுக்கு அவசியமான மூலப் பொருள்களடங்கிய தாதுக்களையும், உயிர்ச் சத்துக்-களையும், உயிரணுக்களுக்கு உரிய வேளையில் தந்து உதவுவது நாம் அருந்தும் உணவுதான். இந்த நுண்ணிய மாறுதல்களை ஆராயும் உணவியற்கலை (The Science of Nutrition) இந்-நூற்றாண்டில் பிறந்து வளர்ந்து இணையற்று விளங்கும் ஓர் அதிசய சத்தி வாய்ந்த பெருஞ்சாத்திரமாகும். இது இந்-நூற்றாண்டிலேதான் தோன்றியதெனினும், இக்குறுகிய காலத்தில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களை அறுதியிடுதல் அரிது. ஒரு நாட்டில் எவ்வளவுக்கெவ்வளவு உணவியலறிவு பெருகி அத்துறையில் சிறந்த ஆராய்ச்சிகள் அதிகரிக்-கின்றனவோ, அவ்வளவுக்கவ்வளவு அந்நாட்டில் வளமும், சுகமும், வாழ்க்கைத் தரமும், கல்வியறிவும் மேம்படும்.

வாழ்க்கையின் சகல பருவங்களிலும் கருப்பையிலுள்ள சிசுத்தொடங்கி, வயது முதிர்ந்த கிழவன் வரையிலும் உணவானது ஊட்டத்தால் ஆற்றலைத் தருகிறது. உணவு

அளிக்கும் ஆக்கத்தால், வாழ்க்கையின் முழுப்பயன் கிட்டுகிறது. உணவுக்கும், சுகவாழ்க்கைக்குமுள்ள இடைவிடாத நெருங்கிய இந்தத் தொடர்பைக் கண்டுபிடித்துச் சரியான உணவு என்ன என்பதை மனிதருக்குக் காட்டியுள்ள விஞ்ஞான வெற்றியின் முக்கியத்துவத்தை விவரிப்பதரிது. இவ்வெற்றியின் பிறிதொரு சிறந்த பண்பென்னவெனில், மற்ற விஞ்ஞான வெற்றிகளிற்போலன்றி, இதில் அழிவுக்கு இடமில்லை; ஆக்கமே நோக்கம்.

உணவுச் சத்துக் குன்றும் போது, உடற்கட்டுச் சிதைந்து, வளர்ச்சி தேய்ந்து, உற்சாகம் குறைந்து, பார்வை மங்கி, மன நிம்மதி குலைந்து, மகிழ்ச்சியும் மறைந்துவிடுகின்றது; நாட்டின் சுகம் மிகவும் சுருங்கிவிடுகின்றது. மெக்லெஸ்டர் (McLester) என்ற பெரியார், 'ஒரு நாட்டைக் காவல் செய்யும் சேனையின் மனோவன்மையைக் காவல் செய்வது உணவு,' என்று கூறியுள்ளார். இதை மனத்திற்கொண்டுதான், ஐக்கிய நாடுகளின் விவசாயப்பகுதியினரும், 'உலக சமாதானத்திற்கு முதற்படி உலக மக்களுக்குப் போதிய உணவைச் சாதிப்பதாகும்,' என்று வற்புறுத்தியுள்ளார்.

இருபதாம் நூற்றுண்டின் புதிய உணவியலறிவால் தோன்றிய புரட்சிகள் அனேகம். வைட்டமின்கள் என்ற உயிர்ச்சத்துக்களின் பெயர்கள் எங்கும் சர்வசாதாரணமாக உலவுகின்றன. ஆயினும், அவற்றின் உண்மைத் தன்மைகளையும் ஒன்றுக்கொன்றுள்ள பந்தங்களையும், நட்புப்போட்டிகளையும், முற்றிலும் அறிந்தவர் யாருமிலர். அவற்றின் நுண்ணிய அமிசங்களை நிர்ணயித்து, அவற்றின் தீவிரத் தொழில்களைத் திறம்படப் புலப்படுத்தி, அவற்றைப் பாமரரும் பழுதின்றிப் பெறுமாறு செய்துள்ள விஞ்ஞானிகளின் ஆராய்ச்சிகள் ஒரு விசித்திர சரித்திரமாகும்.

பிசிதம் என்ற பொருளை இதுகாறும் தசை வளர்க்கும் சத்தாகவே அறிந்திருந்தோம். ஆனல், இன்றைய உணவியல் உலகில், அது தசையை வளர்ப்பது மாத்திரமன்றி, வேறு பல விந்தையான தொழில்களையும் செய்கிறதென்பது தெரிகின்றது. நமது இரத்த ஓட்டத்திற்கும்,

சுவாசத்திற்கும், உயிர் நாடிக்கும் வேண்டிய சில தொழில்களை முடுக்கப் பிசிதம் மிகவும் அவசியம்.

இந்தச் சகாத்தத்தின் உணவியற்கலையில் 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்,' என்ற பழமொழியும் பழமையாகிவிட்டது. ஏனெனில், 'பரிபூரண சுகம்' என்பது நோயற்ற தன்மை மாத்திரமன்று; அதைவிட மிகவும் மேலான சத்தியுடன் வளரும் தன்மைத்து. இந்த வளர்ச்சியில் புத்தம்புது மாறுதல்கள் வாழ்க்கையில் பரிணமித்துப் பொங்கி வாழ்க்கையை இன்பமயமாக்குகின்றன.

உயிருக்கும் உடலுக்கும் இன்றியமையாத சுகத்தைத் தருகின்ற உணவானது, சத்தியளித்தல், உடலென்னும் மனையைக் கட்டுதல், உடற்கூறுகளின் தொழில்களைக் கண்காணித்தல் ஆகிய முத்தொழில்களைப் புரிகிறது. உடலுக்கு ஊட்டமளிக்கும் பொருள்களாகிய பிராணவாயு, நீர், இன்னும் நாற்பது வகைப்படும் தாதுப் பொருள்களெல்லாம் நாம் உணவெனக் கொள்ளுதல் தகுமெனினும், சாதாரணமாக உணவு என்று அருந்தும் ஆகாரத்தை நான்கு பெரிய பிரிவுகளில் அடக்கலாம்.

1. **சத்தியளிப்பவை:** தேகமாகிய இயந்திரம் இயங்கச் சத்தி தரும் அரிசி, தானியங்கள், எண்ணெய்கள், கிழங்குகள், சர்க்கரைகள் ஆகிய முக்கிய உணவுகள்.

2. **தசை வளர்ப்பவை:** உடலெனும் வீட்டை உறுதியாகக் கட்டப் பிசிதத்தை (Proteins) தரும் பருப்புக்கள், கொட்டைகள், முட்டைகள், மாமிசங்கள் முதலியவை.

3. **உலோக உப்புப் பொருள்கள்** (Minerals): தேகக்கட்டைக்காக்கும் இப்பொருள்களைப் பால், கீரைகள், காய் கறி, முட்டை, மாமிச வகைகள் மூலமாகப் பெறலாம். உப்பாகவும் உண்ணலாம்.

4. **உயிர்ச் சத்துக்கள்** (Vitamins): நுண்ணிய அளவுகளில் மிகப்பெரிய தொழில்களைச் செய்யும் இவ்வூக்குப் பொருள்கள் இருபதுக்கு மேலுள்ளன. இவற்றை விரிக்கிற்பெருகும்.

முக்கியமாக வைட்டமின் A, சுகத்திற்கும் பலத்திற்கும், சிறந்த மேனிக்கும், கூரிய பார்வைக்கும், மூளை-

யின் தொழில்களுக்கும் மிகவும் முக்கியமானது. மீன் எண்ணெய்கள், முட்டைகள், ஈரல்கள் முதலியவற்றில் இது அதிகமாயுள்ளது. கீரைகளிலும் மஞ்சள் நிறக் காய்கனி-களிலுமுள்ள கேரட்டீன் (Carotene) என்ற பொருளை நமது தேகம் வைட்டமின் 'A' ஆக மாற்றிக்கொள்ள முடியும். ஆகவே, மரக்கறியுண்பவரும் இதை எளிதில் பெறலாம்.

வைட்டமின் 'B' கூட்டம் : இவற்றின் பல தொழில்-களும் மிகவும் முக்கியமானவை. உடற்பலத்திற்கும், மூளைப் பெருக்கத்திற்கும் இரத்த வளர்ச்சிக்கும், கண் பார்வைக்கும், இன்னும் பல தொழில்களுக்கும் இவை மிகவும் தேவை. வைட்டமின் B இல்லாதபோது காக்கைவலிப்பு உண்டாகிறது. வைட்டமின் B என்ற ரைபோபிளேவின் (Riboflavin) குறையும் போது, தலை வழுக்கையும், கண்ணில் பூவும் தோன்றுகின்றன. இவற்றிற்குச் சிறந்த இருப்பிடங்கள் அரிசித்தவிடு, ஈஸ்டு (yeast), கீரைகள், முளைகட்டிய பயறு-கள், தானியங்கள், ஈரல்கள் முதலியன.

வைட்டமின் C: பல்லுறுதிக்கும், இரத்தக் குழாய்-களின் வலிமைக்கும், எலும்புகளின் கடினத்திற்கும், சுகத்-திற்கும், பலத்திற்கும் இது அதிகம் தேவை. எல்லாக் கீரை-களிலும், ஆரஞ்சுப் பழவகைகள், எலுமிச்சம்பழம், நெல்லிக்காய், கொய்யாப்பழம், தக்காளிப்பழம் முதலிய ஆகாரங்களிலும் இது அதிகமாய் அமைந்துள்ளது.

வைட்டமின் D: முக்கியமாக வளரும் குழந்தைகளுக்கு இது அதிக அவசியம். எலும்பின் உறுதியையும், அதனால் தேகக்கட்டையும் காப்பது இவ்வுயிர்ச்சத்து. நமது நாட்டில் இதைத் தேடிப் பெற வேண்டிய அவசியமில்லை. ஏனெனில், சூரிய வெளிச்சம் நமது தேகத்தில் படும்போது நமது சரு-மத்திலுள்ள வேறு ஒரு பொருளுடன் அது கூடி, வைட்ட-மின் Dயைத் தருகிறது.

வேறு பல E, P, K முதலிய வைட்டமின்களும் முக்கிய-மானவை. உணவை இப்படிக் கூறுபடுத்தினாலும், இவை அனைத்தும் சேர்ந்து ஒத்துழைக்கும்போதுதான், வாழ்வில் சுகம் கிடைக்கும். இவை தனித்தனியாக நன்மை தர முடி-யாது. இறைவன், உலக ஒற்றுமைக்கு அவசியமான ஒத்-

துழைப்பு, கூட்டுறவு என்ற பண்புகளை நமது தேகத்தின் நுண்ணிய அணுக்களிலேயே புகுத்திவிட்டான் போலும்!

மேற்கண்ட உணவுச் சத்துக்கள் குறையும் போது, உணவின்மையால் உண்டாகும் நோய்கள் தோன்றுகின்றன. மாலைக்கண், மைனு வாய், வாய்ப்புண், வயிற்றுப்போக்கு, தொட்டிக்கால், தொப்பை வயிறு, மங்கிய பார்வை, மார்பு வலி, மயக்கம் முதலியன உதாரணங்களாகும். போதிய உணவை உட்கொண்டால், இந்த நோய்கள் வாராமல் இருப்பதுடன் தொத்து நோய்களைத் தொலைக்கும் திறமையும் கிடைக்கிறது. நோயற்ற வாழ்வினுல் நிறைந்த சுகமும் பெற்று வாழ்நாட்கள் நீண்டு வனப்புற ஏதுவாகிறது.

மேற்கண்ட உணவுப் பகுதிகளைப் போதிய அளவில் சேர்ப்பதோடு நமது கடமை முடிந்துவிடாது. அவற்றின் சத்துக்கள் சேதமுருவண்ணம் செவ்விய முறையில் சமைத்து, விரயம் செய்யாமல் விருப்பமுடன் உண்ண வேண்டும்.

அரிசியையே பிரதானமாக உண்ணும் தமிழ் நாட்டில் சத்துணவின்மையால் உண்டாகும் வியாதிகள் பல. கடந்த ஆறு வருடங்களாக நான் செய்து வந்துள்ள உணவு ஆராய்ச்சி மூலமாக நமது உணவின் முக்கியக் குறைபாடு, வைட்டமின் 'A' இல்லாமை என்பது தெரிகிறது. நமது எளிய அரிசி உணவை ஆராய்ச்சிச்சாலைகளில் எலிகளுக்குத் தரும்போது அவை வளர்வதே இல்லை. கண்களும் குருடாகி விடுகின்றன. அடுத்தபடியாக அரிசி உணவின் குறையாவது B கூட்ட வைட்டமின், அதிலும் ரைபோபிளேவின் (Riboflavin) குறையே அதிகமானது. இவற்றைப் பூர்த்திசெய்த பின்னர் நமது பிசித உணவு கொழுப்புணவுகளையும் உலோக உப்புக்களையும் அதிகரிக்க வேண்டும். வெறுஞ்சாதத்தையே அதிகமாக உண்ணுமல், அரிசியுடன் பருப்பு, கிழங்கு, கீரை, கனி, பால் முதலிய பண்டங்களைக் கலந்து சாப்பிட வேண்டும்.

வளரும் குழந்தைகள், கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார்கள் முதலியவர்களுடைய போஷாக்கை அதிக சிரத்தையுடன் கவனிக்க வேண்டும். இங்ஙனம், இன்றைய விஞ்ஞான விளக்கின் ஒளியைக்கொண்டு, சத்துணவின் தன்மைகளை

ஆராய்ந்து, உணவியற்கொள்கைகளை நாம் கடைப்பிடித்து ஒழுகுவோமானால், உணவுக்குறை ஒழிந்து, அறிவுக் கலை வளர வழியுண்டாகும் என்பதற்கு ஐயமில்லை.

அருஞ்சொற்பொருள் :

பத்து - மானம், குலம், கல்வி, வண்மை, அறிவுடைமை, தானம், தவம், முயற்சி, தாளாண்மை, காதல் என்பன. வந்தனை - வணக்கம், விரயம் செய்தல் - வீணாக்குதல், சிசு - குழந்தை, பந்தம் - தொடர்பு, பழுதின்றி - குற்றமின்றி, சகாத்தம் - நூற்றாண்டு, ஏது - காரணம்.

வினாக்கள் :

1. இந்தியாவைப் பிற நாடுகள் எவ்வாறு போற்றுகின்றன ? ஏன் ?
2. உணவு விஷயத்தில் நம் நாட்டை அமெரிக்காவோடு ஒப்பிடுக.
3. விவசாயிகளை நடத்துவதில் நமக்கும் மேனாட்டினருக்கும் உள்ள வேறுபாடுகளை விளக்குக.
4. உணவு நிலையை உயர்த்த முனைவபர் அறிய வேண்டிய உண்மைகள் யாவை ?
5. வாழ்க்கையின் முக்கியம் எப்பொழுது உதிக்கின்றது ?
6. உணவின் முக்கியத்தை விளக்குக.
7. உணவுத் துறையில் விஞ்ஞானம் எத்தகைய வெற்றியடைந்துள்ளது ? அதன் சிறப்பு யாது ?
8. உணவுச் சத்துக் குன்றும் போது விளையும் தீமைகள் யாவை ?
9. ‘ பிசிதம் ’ எவ்வாறு பயன்படுகிறது ?
10. நல்ல உணவு செய்யும் முத்தொழில்கள் யாவை ?
11. ஆகாரத்தின் நான்கு பெரிய பிரிவுகள் எவை ?
12. வைட்டமின் ‘ A ’ எப்பொருள்களிலிருந்து கிடைக்கின்றது ? அதனால் ஏற்படும் நன்மைகள் யாவை ?
13. வைட்டமின் ‘ B ’, ‘ C ’, ‘ D ’, என்பவற்றைப் பற்றிச் சிறு குறிப்பெழுதுக.
14. உணவுச்சத்துக் குறையும்போது ஏற்படும் நோய்கள் யாவை ?
15. கட்டுரை ஆசிரியர் செய்துள்ள உணவுச்சத்து ஆராய்ச்சியின் பயனாகக் கண்டறிந்த உண்மைகள் யாவை ?

8. கல்யாணத் தரகர்

(ஒரு பாட்டுக்கு உரை)

[ராவ்பகதூர் சி. எம். இராமசந்திரஞ்செட்டியார் அவர்கள், B.A., B.L.]

வெள்ளையர்களுக்குள்ளே மணம் பேசவும் நடத்தவும் தரகர்கள் வேண்டுவதில்லை. ஒரு யௌவன புருஷன் ஒரு யுவதியை நாடகசாலையிலோ, விளையாட்டிடத்திலோ, பாடசாலையிலோ, இரயில் வண்டியிலோ சந்திப்பான். இருவருடைய பார்வையும் ஒன்று சேர வசீகரம் அடைவார்கள். அடிக்கடி சந்திக்கக் காதல் முற்றி மணம் ஏற்படும். பின்னர் நடக்கும் பிரிவினைக் கோலங்களை நாம் இங்கே கவனிக்க வேண்டுவதில்லை. ஆனால், இவ்வித மணத்திற்குத் தரகன் என்னும் தூதன் வேண்டுவதில்லை.

நமது நாட்டிலே மணமகன் பெண்ணைப் பார்க்க லஜ்ஜைப்படுவான் ; இது சிறிது மாறிக்கொண்டு வருகிறது. பெண்ணோ, மணமகனைக் காண்பதே இல்லை. இரு திறத்தாரையும் ஒன்று சேர்க்கப் பெற்றோர் மாத்திரமன்றித் தரகர் ஒருவரும் அத்தியாவசியமாக ஏற்படுகிறார்.

நமது நாட்டு விவாகம் தெய்விகம் பொருந்தியது ; மத சம்பந்தமானது ; பெருமை வாய்ந்தது என்போம் ; மேல் நாட்டு மணங்களையும், தற்கால நூதன சட்ட சம்பந்த மணங்களையும் தாழ்த்திப் பேசுவோம். ஆனால், நமது நாட்டுத் திருமணம் ஒப்பந்தம் இல்லாத தெய்விகமணமாயின் தரகர்கள் மத்தியில் எதற்கோ, தெரியவில்லை.

ஆனால், முற்காலத்தில் நமது நாட்டில் தரகர் இல்லாத மணங்கள்தாம் நடைபெற்றன. ஒரு தலைவன் ஒரு நாள் உல்லாசமாகக் காட்டில் வேட்டை ஆடச் செல்வான். அங்கே தினைப்புனத்தைக் காத்துக்கொண்டு கிளிகளை ஓட்டிக்கொண்டு ஓர் அழகிய பெண் இருப்பாள். தலைமகன் அவள் அழகைக் கண்டு மயங்கிப் பேசுவான். பெண்ணோ, தானும் காதல் பூண்டு பேச நாணுவாள். அப்போது ஒரு யானை எதிரிடும். பெண் நடுங்கி ஓடித் தலைவனிடம் அடைக்கலம்

புகுவாள். தலைவன் யானையை அம்பால் எய்தி வீழ்த்தி அவளைக் காப்பாற்றுவான். பின்னர் நீர்ச்சுனையில் அவள் குளிக்கையில் வெள்ளத்தில் விழுந்து கதறுவாள். உடனே தலைவன் சுனையில் விழுந்து நீந்தி அவளை எடுப்பான். காதல் முற்றி ஊர் சேர்ந்து மணம் நடக்கும்.

இதுதான் ஆதியிலே தமிழ் நாட்டில் நடந்த இயற்கை மணமுறை. வடநாட்டிலும் துஷ்யந்தன் சகுந்தலையை மணந்தது இம்மாதிரியே. இதை வடநூலார் காந்தருவ விவாகம் என்பார்கள். இவ்விவாகங்களில் தரகர் இல்லை; விவாகரத்து இல்லை; வியாபாரமும் இல்லை.

ஆனால், இப்போது பாருங்கள்! கல்யாணத் தரகர் இல்லா-விட்டால் விவாகம் நடக்குமா? பிரதி பிரயோசனம் இல்லாமல் மணம் நிறைவேறுமா? விவாகச் சந்தைகள் (மார்க்கட்டுகள்) தினமும் அதிகமாகிக்கொண்டு வருவதைக் காண்கிறோ-மல்லவா? விவாகத் தரகர்களுடைய மதிப்பும் அதிகரித்து வருவதை நாம் தினந்தோறும் காண்கிறோம். இவர்கள் முன் சாரதாச் சட்டம் பஞ்சாய்ப் பறப்பதில்லையோ? இத்தகைய தரகர்கள்தாம் தமிழர்களுடைய இயற்கை மணத்தை, ஒப்பந்த வியாபார மணம் ஆக்கினார்கள்.

வியாபார ஒப்பந்தங்களில் உள்ள மோசடி, தவறுதல், பொருள் மாறுபாடு, ஆள் மாறாட்டம், பிரதி பிரயோசன-மின்மை முதலிய குற்றங்கள் இங்கேயும் உண்டு. தற்காலத்-தில் இவை அதிகமாகிக்கொண்டு வருகின்றன. பெரும்-பாலும் பெரிய நிலைமையில் இருப்பவர்கள் விவாக நுட்பங்-களை அறிய மாட்டார்கள். அன்னார்களுக்குத் தரகர்கள் அவசியம். அவர்களே அதிகமாக மோசம் போகிறவர்கள். மோசத்தை வெளியில் காட்ட வெட்கப்பட்டு வீட்டுக்குள்ளே அவர்கள் அடங்கியிருப்பது சகஜம். ரோஷமுள்ளவர்கள் வெளியிட்டு வேடிக்கைக்கு ஆளாவதும் சகஜம்.

தற்காலத்தில் தரகர்களுடைய தொழில் மிகவும் சிறந்து-கொண்டு வருகின்றது. நாட்டில் செல்வாக்கும் தற்கால இந்திய நாகரிகமும் அதிகமாக அதிகமாகத் தரகர்களுக்குக் கொள்ளைதான். அதிகம் படித்த பிள்ளைகளுக்குப் பண ஆசை அதிகம். பெண்ணைப்பெற்ற பெற்றோர்களுக்குப் படித்த

மருமகன் வேண்டும். அவன் சம்பாதித்தாலும் சம்பாதியா-விட்டாலும் அதில் அக்கறை இல்லே. ஆகவே, தேடிப்பிடிக்கத் தரகர் அவசியமே. அதிலும் வைதிகம் முற்றமுற்றச் சாரதா சட்டமும் அமுலுக்கு வரவே, தரகருடைய மதிப்புக்கு அளவில்லே.

தரகனுடைய சாமர்த்தியம் யாரால் அளவிட முடியும்? கைதேர்ந்த மார்வாரித் தரகனும் நம் தென்னுட்டு வைதிக கல்யாணத் தரகனுக்குத் தோற்றுவிடுவான். ஆளுக்குத் தகுந்த நூதன ஜாதகம், நினைத்தபடி ஜனனதினம், எண்ணு-கிறபடி பொருத்தம், பணத்துக்குத் தகுந்த அழகு, வயது, படிப்பு முதலியன ஏற்படும். இப்படிப்பட்ட இந்திர ஜாலங்-கள் எந்தச் சித்தராலும் செய்ய முடியா. நாலு நாள் கலியாணம் ஒரு நாளிலும் ஆகும்; நூறு ரூபாய்க் கலியாணத்துக்குப் பதினுயிரம் ஆனுலும் ஆகும்; ஒரே நாளில் குபேரனேயும் பிச்சை ஆண்டி ஆக்கிவிடுவார்கள். பிச்சை ஆண்டி குபேரனும் ஆகலாம்.

ஆனுல், தரகர்கள் படும் பாடு வெகுகஷ்டமே. எத்தனை பேரிடம் சொல்ல வேண்டும்! எத்துணை துப்பறிவு நடத்த-வேண்டும்! எவ்வாறு சாகசம் செய்யவேண்டும்! எத்தனை வசவுகள் சகிக்கவேண்டும்! இவைகளை எல்லாம் மீறியன்றே ஒருமணம் நிறைவேறும்? தன்னேவிடக் கைதேர்ந்த மனித-ரிடம் அகப்பட்டுக்கொண்டால், இந்தத் தரகன் திண்டாடும் திண்டாட்டத்தை நாம் கண்ணுல் காணமுடியாது. இவ்விதம் ஒரு தரகன் திண்டாடின கதையை முந்நூறு ஆண்டுகளுக்கு முந்தியிருந்த ஒரு கவி அழகாக வருணித்திருக்கிருர்.

ஓர் அரசனுக்குப் பெண்வேண்டியிருந்தது. அக்காலத்-தில் அரசர்கள் இதரவகுப்பாரிலும் மணம் செய்துகொள்வார்-கள். வேடர் குலத்தில் ஓர் அழகிய பெண் இருந்தாள். அவளை மணம் பேசத் தூதனை அனுப்பினுன். தரகனுக்குத் தூதன் என்ற கண்ணியமான பெயர் உண்டு. அத்தூதன் ஒரு சிறந்த பாட்டாளி. வேடர் ஊருக்குச் சென்று அப்-பெண்ணின் பெற்ரேரிடம் சொன்னுன்; அரசனுடைய திருமுக ஓலேயும் எடுத்துச் சென்ருன்.

தூதன் வேடனேக் கண்டு அரசர்களுடைய குலம்

கோத்திரம் பிரபாவம் எல்லாம் வெகு அழகாகக் கூறித் தன் காரியத்தை எடுத்துரைத்தான். ‘சந்திரமதி சக்கரவர்த்தியாகிய அரிச்சந்திரனைப் பெறவில்லையா? தமயந்தி நளச்சக்கரவர்த்தியைப் பெறவில்லையா? சீதை இராமபிரானைப் பெறவில்லையா? துரோபதை பாண்டவர்களைப் பெறவில்லையா? அவர்களைப்போல உன் மகளும் மன்னர் மன்னனாகிய எம்மரசனை மணந்து அரண்மனையில் இருக்கலாமே! நளனையும் தமயந்தியையும் பிணைத்த அன்னத்தைப் போன்றே நானும் வந்திருக்கிறேன். சிவபாக்கியம் எவ்விதம் உமது சிறு குடியாகிய வேடர்களுக்குக் கிடைக்கும்? தவறுதேயுங்கள்,’ என்று பன்னிப் பன்னிப் பேசினான்.

இதையெல்லாம் சிறிது நேரம் நன்றாய்க் கேட்டுக்கொண்டிருந்த வேடன், தன் இயற்கைக் கவுரவத்தை முன்னிட்டுத் தூதனை விளித்து, ‘மன்னர்கள் மனைவிகளை விரும்பிக் கேட்கவந்த தூதரே! உங்கள் மன்னவர்கள் தங்கள் மனைவிகளை வைத்துக்கொண்டு வாழத்தகுதியுள்ளவர்களா?’ எனக் கேட்கத் தூதன் ஆச்சரியப்பட்டு, ‘ஏன் இல்லை? அவர்கள் மிகுந்த செல்வம் படைத்தவர்கள் அல்லவா?’ என்றான்.

‘ஆமாம், செல்வத்திற்கு என்ன குறைவு? நீர் எடுத்துக்காட்டின அரசர்களின் செய்கைகளையே எடுத்துப் பேசுவோம்; அவர்கள் தங்கள் மனைவிகளை வைத்துக்கொண்டு செவ்வனே வாழ்ந்தவர்களா?’

தூதன், ‘இவன் என்ன, நம் பேச்சினாலே நம்மையே அடக்கிவிடுவான் போல இருக்கிறதே!’ என்றெண்ணி, ‘எப்படி? சொல்லும்; பார்ப்போம்,’ என்றான்.

வேடன், ‘ஓர் அரசன் தன் மனைவியை வைத்துக்கொண்டு வாழத்தெரியாமலே கடன் கட்டுவதற்கு அவளை விற்றுவிட்டான் அல்லவா?’

‘ஆமாம்.’

‘ஒரு மன்னன் நடுக்காட்டில் தன் மனைவியின் ‘சீலை’யைப்பாதி அறுத்துத் தான் உடுத்துக்கொண்டு அவளை அனாதையாகத் துஷ்டமிருகங்களிடை விட்டுவிட்டு ஓடிவிட்டான் அல்லவா?’

'ஆம் ; இனி என்ன ?'

'மற்ருேர் அரசன் தன் அழகிய கற்புக்கரசியை வேறு ஒருவன் தூக்கிக்கொண்டு போய்ப் பதினன்கு வருடம் சிறையில் வைத்திருக்கவும் அழுதுகொண்டு திரிந்து-கொண்டிருந்தானல்லவா ?'

'சரி, இனியுமுண்டோ ?'

'பல அரசர்கள் சபையிலே தம் மனைவியை இழுத்து மானபங்கம் செய்யவும், வாய் பேசாமல் ஆண்மை இன்றி மதி மயங்கி நின்ருர்கள் அல்லவோ ஐந்து மன்னர்கள் ?'

'அடடா, இவனிடம் நமது ஜம்பம் சாயாது போல இருக்கிறது !' என்று தூதன் நினைக்குமளவில் வேடன்,

'இக்குணமும் இதற்கேற்ற செயலும் கொண்டவர்கள் அல்லரோ உம் மன்னவர்கள் ? ஆகவே, மணம் என்ற பேச்சை எடுத்து வந்த வாயை உமியும் ; நீர் கொண்டு வந்த ஓலையைக் கிழித்துவிட்டு ஓடிவிடும்,' என்ருன்.

மேலும், தூதன் விடானுகி, 'வேடரே, எங்கள் மன்னர் குலத்தை இவ்வளவு இழிவாகப் பேசும் உம் குலத்தைப்பற்றிச் சிறிது யோசியும். உங்கள் தாழ்ந்த குலத்திற்கு மேற் குலத்தாராகிய அரசர்கள் உறவு கிடைக்குமா ?' என்ருன். அதற்கு வேடன் மிகுந்த இறுமாப்புடன், 'ஒய் தூதரே, எங்கள் குலம் எப்படிப்பட்டதென்று எண்ணுகின்றீர் ? எங்கள் குலத்தான் ஒருவன், தான் சாப்பிட்டு ருசி பார்த்த எச்சிலைப் பரமசிவன் உண்டார் என்பது அறியீரோ ? அந்த ஒரு பிரீதிக்காக அப்பரமசிவனுடைய மகன் முருகவேளுக்கு நாங்கள் வளர்த்த ஒரு பெண்ணைக் கொடுத்தோம்.'

'அப்படியா !'

'ஆமாம், அப்படியாயின், நாங்கள் அருமையாகப் பெற்றெடுத்த பெண்ணை உங்கள் மன்னர்களுக்குக் கொடுப்போமோ ? வேறு பேச்சென்ன ? பைத்தியமோ ? ஓடிவிடும்,' என்று பேசினன்.

இதனைக் கேட்ட தூதன் படிப்பும் சாதுரியமும் இவர்-களிடம் செல்லா என்று திரும்பிவிட்டான்.

இவ்விதம் ருசி வாய்ந்த கதையை அக்காலத்துக் கவி வருணித்ததை இனிப் பார்ப்போம் :

விற்ற தார்?கலை பாதி யோடு
வனத்தி லேஅழ விட்டதார் ?
வெஞ்சி றைப்புக விட்ட தார்?துகில்
உரிய விட்டு விழித்ததார் ?
உற்ற தாரமும் வேண்டும் என்றினி
மன்னர் பெண்கொளல் ஒண்ணுமோ ?
உமிய டாமணம் என்ற வாய் ;கிழித்(து)
ஓலை காற்றில் உருட்டடா.
வெற்றி யாகிய முத்தி தந்தருள்
வேங்கை மாநகர் வேடர்யாம் :
விமல ரானவர் எமைஅ டுத்தினி(து)
எங்கள் மிச்சில் மிசைந்தபின்,
பெற்ற வேலர் தமக்கு யாம்ஒரு
பெண்வ ளர்ப்பினில் ஈந்தனம் ;
பெற்ற பிள்ளை கொடுப்ப ரோ ?இ(து),என் ?
பேய்பி டித்திடு தூதனே !

இவ்விதம் முன் காலத்தில் தரகர்கள் பட்ட பாடு இப்போதிருக்கும் தரகர்கள் படுகிறார்களா ?

அருஞ்சொற்பொருள் :

யுவதி - இளம்பெண், வசீகரம் - கவர்ச்சி, லஜ்ஜை - வெட்கம், விவாகம் - திருமணம், சகஜம் - இயற்கை, சாகசம் - பாசாங்கு, பிரபாவம் - கீர்த்தி, கலை - ஆடை, தாரம் - மனைவி, விமலர் - குற்ற மற்றவர், மிச்சில் - எச்சில், வேலர் - முருகர்.

வினாக்கள் :

1. நம் நாட்டுத் திருமணங்களிலுள்ள குறைகளைக் குறிப்பிடுக.
2. பண்டைக்காலத் தமிழ் மண முறையை விளக்குக. அதன் சிறப்பு யாது ?
3. திருமணத்தில் தரகரைத் தேடுவது ஏன் ?
4. தரகர் படும் பாட்டைக் கூறுக.
5. தூதன் வேடனிடம் பன்னிப் பன்னிப் பேசியன யாவை ?
6. வேடன் அரசர்களை எவ்வாறு பழித்துப் பேசினான் ?

SELVAN SENTAMIL CHELVAM

IV FORM—SPECIAL

COMPILED BY
E. PANDARA NAMBIAR

EDITED BY
VIDWAN M. V. VENUGOPAULA PILLAI

JEGASELVAN & CO.,
NAGERCOIL

 [*Price As.* 10